Find us on facebook/tamilmirror Follow us on tamilmirror epaper/tamilmirror.lk

தமிழ் Mirror www.tamilmirror.lk

MONDAY, AUGUST 12 2024

திங்கட்கிழமை, ஆகஸ்ட் 12, 2024 | ஒளி: 10 கதிர் 026 | பக்கம்:08 | நகரப்பதிப்பு★ FREE



# தாலி கொள்ளையா? மறுத்தது நிர்வாகம்

திருகோணமலை, திருகோணேஸ்வரர் ஆலயத்தில் பல கோடி ரூபாய் பெறுமதியான தங்கத் தாலி ஒன்று கொள்ளையிடப்பட்டிருப்பதாக வெளியான தகவலை, ஆலய நிர்வாகம் மறுத்து அறிக்கை வெளியிடப்பட்டுள்ளது. பல கோடி ரூபாய் பெறுமதியான தங்கத் தாலி காணாமல் போனதாக கூறப்படுவது உண்மைக்குப் புறம்பானது என்றும் அதில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

தொடர்ச்சி P2

## ரணிலின் அழைப்பை

# அரியநேத்திரன் அணி மறுத்தது




**காரணத்தை எமக்கு அறிவித்திருக்கவில்லை. ஒரு திட்டமிடப்படாமல் இந்த பேச்சுவார்த்தையில் பங்கேற்பதில் அர்த்தம் இல்லை**

*நிதர்ஷன் வினோத், க. அகரன்*

ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவுடனான பேச்சுவார்த்தையில் பங்கேற்காதிருக்க தமிழ் தேசிய பொதுக் கூட்டமைப்பு தீர்மானித்துள்ளது.

தமிழ் தேசிய பொதுக் கட்டமைப்பில் அங்கம் வகிக்கும் கட்சித் தலைவர்களுக்கும் சிவில் சமூக தலைவர்களுக்கும் திங்கட்கிழமை (12) ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவுடனான சந்திப்புக்கு ஜனாதிபதி செயலக பிரதிநிதிகளால் தொலைபேசி மூலம் அழைப்பு விடுக்கப்பட்டிருந்தது.

குறித்த சந்திப்பில், தமிழ்த் தேசிய பொதுக் கட்டமைப்பு என்ற அடிப்படையில் 14 உறுப்பினர்களும் சந்திப்பில் கலந்து கொள்ள மாட்டார்கள்.

ஜனாதிபதி தேர்தல் வேலைகளில் மூழ்கி இருப்பதால், குறுகிய கால அழைப்பின் அடிப்படையில் இந்த சந்திப்பில் தமிழ்த் தேசியப் பொதுக்கட்டமைப்பாக கலந்து கொள்வது சிரமமாக இருக்கும்.

தொடர்ச்சி P2

# “சஜித்தை வீழ்த்துவதே நால்வரின் இலக்கு”



ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவுடன் ஒப்பந்தம் செய்துகொண்டே, பீல்ட் மார்ஷல் சரத் பொன்சேகா தேர்தலில் போட்டியிடுகின்றார் என குற்றஞ்சாட்டிய ஐக்கிய மக்கள் சக்தியின் பாராளுமன்ற உறுப்பினர் நளின் பண்டார, எமது கட்சியின் தலைவர் சஜித் பிரேமதாஸவை வீழ்த்துவதே நால்வரின் ஒரே இலக்காகும் என்றார்.

தொடர்ச்சி P2



# சஜித் “ராஜபக்ஷ” ஆகிவிட்டது

ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவின் வெற்றிக்காக கம்பஹா மாவட்டத்தில் உள்ள அனைத்து தொகுதிளையும் உள்ளடக்கிய வகையில் ஜனாதிபதி தேர்தல் கூட்டு நடவடிக்கை குழுக்கள் நியமிக்கப்படவுள்ளன.

அமைச்சர் பிரசன்ன ரணதுங்க மற்றும் கம்பஹா மாவட்ட பாராளுமன்ற உறுப்பினர்களின் தலைமையில் சனிக்கிழமையும் (10) ஞாயிற்றுக்கிழமையும் (11) இந்தக் குழுக்கள் நியமிக்கப்பட்டன. இந்தக் குழுக்களை ஸ்தாபிப்பதில், ஸ்ரீலங்கா பொதுஜன பெரமுன, ஐக்கிய தேசியக் கட்சி, ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சி, பொதுஜன ஐக்கிய முன்னணி, ஐக்கிய மக்கள் சக்தி உள்ளிட்ட ஜனாதிபதிக்கு ஆதரவான அனைத்துக் கட்சிகளின் பிரதிநிதிகளும் இந்தக் கூட்டமைப்பில் உள்ளடங்குகின்றது.

தொடர்ச்சி P2

# ராஜபக்ஷ அணிக்குள் கருத்து முரண்பாடு



ஸ்ரீ பொதுஜனபெரமுன, ஜனாதிபதி தேர்தல் தொடர்பில் எடுத்துள்ள தீர்மானம் காரணமாக ராஜபக்ஷ குடும்பத்திற்குள் கருத்துவேறுபாடுகள் எழுந்துள்ளதாக அரசியல் வட்டாரங்கள் தெரிவித்துள்ளன.

மஹிந்த ராஜபக்ஷ குடும்பத்தவர்கள் உட்பட ராஜபக்ஷ குடும்பத்தவர்கள் பலர், எதிர்வரும் ஜனாதிபதி தேர்தலில், ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவுக்கு ஆதரவளிக்கவேண்டும் என்ற நிலைப்பாட்டை கொண்டுள்ளனர்.

தொடர்ச்சி P2



# தீர்த்தோற்சவம்...

கொழும்பு வெள்ளவத்தை மயூரபதி ஸ்ரீ பத்திரகாளி அம்மன் கோயில் 37வது ஆண்டு பஞ்சரத ஊர்வல பெருவிழா சனிக்கிழமை (10) இடம்பெற்றது. இதனை தொடர்ந்து, ஞாயிற்றுக்கிழமை(11) பக்தர்கள் புடைசூழ பால்குடபவனியுடன் தீர்த்தோற்சவம் இனிதே நிறைவடைந்தது.

படம்: செல்லதுரை கிருஷ்ணகுமார்

# நல்லூரில் ஒழுங்கை அத்துமீறிய பிக்குகள்



*பு.கஜிந்தன்*

நல்லூர் கந்தசுவாமி கோவில் பெருந்திருவிழா காரணமாக வாகன போக்குவரத்துகளை தடை செய்யும் வீதி தடைகளையும் மீறி நல்லூர் கந்தசுவாமி ஆலய முன்பக்கம் வரை அத்துமீறி பௌத்த பிக்குகளின் வாகனங்கள் சனிக்கிழமை (10) உள்நுழைந்துள்ளன.

இந்த செயற்பாடானது பக்தர்கள் மத்தியில் பெரும் விசனத்தை ஏற்படுத்தியுள்ளது. கடந்த வருடமும் இவ்வாறு ஒரு சம்பவம் இடம்பெற்றுள்ளது.

தொடர்ச்சி P2



# ரூ.1,700 குறித்து இன்று பேச்சு

தோட்ட தொழிலாளர்களுக்கு 1700 சம்பள அதிகரிப்பை வழங்குவதாக 7 பெருந்தோட்ட நிறுவனங்கள் இணக்கம் தெரிவித்துள்ளதாகவும், தொழில் அமைச்சர், திங்கட்கிழமை (12) அது குறித்து சம்பள நிர்வாகச் சபையுடன் பேசவிருப்பதாகவும், அவசியம் ஏற்படும் பட்சத்தில் அதற்கான சட்டத்தை நிறைவேற்ற தயாராக இருப்பதாகவும் ஜனாதிபதி ரணில் விக்ரமசிங்க தெரிவித்தார்.

தொடர்ச்சி P2

# இரண்டு நாட்களுக்கு GS வேலைநிறுத்தம்




கிராம சேவகர்கள் திங்கட்கிழமை (12) முதல் வேலை நிறுத்த போராட்டத்தில் குதித்த உள்ளதாகவும், அந்த போராட்டம் இரண்டு நாட்களுக்கு நீடிக்கும் என்றும் எச்சரித்துள்ளனர்.

இதன்படி திங்கட்கிழமையும் (12) செவ்வாய்க்கிழமை (13) சேவையில் ஈடுப்படப்போவதில்லை என குறிப்பிட்டுள்ளனர்.

கொழும்பில், ஞாயிற்றுக்கிழமை (11) இடம்பெற்ற ஊடக சந்திப்பில் கலந்து கொண்டு கருத்துரைத்த போதே, கிராம உத்தியோகத்தர் தொழிற்சங்க கூட்டணியின் இணைத் தலைவர் நந்தன ரணசிங்க மேற்கண்டவாறு தெரிவித்தார்.

# சஜித்துடன் சுதர்ஷனி சங்கமம்



பாராளுமன்ற உறுப்பினரான விசேட வைத்திய நிபுணர் சுதர்ஷனி பெர்னாண்டோபுள்ளே, எதிர்க்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாசவின் அரசியல் பயணத்திற்கு ஆதரவளிக்கும் நோக்கில் ஐக்கிய மக்கள் சக்தியோடு, ஞாயிற்றுக்கிழமை (11) இணைந்து கொண்டார்.

2020 பொதுத் தேர்தலில் ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியை பிரதிநிதித்துவப்படுத்தி ஸ்ரீலங்கா பொதுஜன பெரமுனவில் போட்டியிட்டு கம்பஹா மாவட்ட பாராளுமன்ற உறுப்பினராக தெரிவு செய்யப்பட்டார்.

இவர் கம்பஹா மாவட்டத்தில் இருந்து பாராளுமன்றத்தை பிரதிநிதித்துவப்படுத்திய நன்மதிப்பு மிக்க அரசியல்வாதியான அமைச்சர் ஜெயராஜ் பெர்னாண்டோபுள்ளேயின் பாரியாராவார். பல்வேறு அமைச்சுப் பதவிகளை வகித்துள்ள இவர் கடந்த அரசாங்கத்தின் கீழ், ஆரம்ப சுகாதார சேவைகள், தொற்றுநோயியல் மற்றும் கோவிட் நோய்த் தடுப்பு நடவடிக்கைகள் இராஜாங்க அமைச்சராக பதவி வகித்தமை குறிப்பிடத்தக்கது.

தொடர்ச்சி P2

# வியாழனன்று விசேட பாதுகாப்பு



ஜனாதிபதி தேர்தலுக்கான வேட்புமனு தாக்கல் செய்யும் தினமான எதிர்வரும் 15ஆம் திகதி விசேட பாதுகாப்பு ஏற்பாடுகள் முன்னெடுக்கப்படவுள்ளன. தேர்தல்கள் ஆணைக்குழுவின் ஆலோசனைக்கமைய இந்த விசேட பாதுகாப்பு நடவடிக்கைகள் நடைமுறைப்படுத்தப்படவுள்ளன.

தொடர்ச்சி P2

# தவறான பாதையில் ஏறியவர் மரணம்



தெஹியோவிட்டவிலிருந்து கம்பளைக்கு வந்து அம்புலுவாவ மலையில் தவறான பாதையில் ஏறச் சென்ற நபரொருவர் மீது பாரிய கல் விழுந்ததில் அந்நபர் ஞாயிற்றுக்கிழமை (11) உயிரிழந்துள்ளதாக பொலிஸார் தெரிவிக்கின்றனர்.

தொடர்ச்சி P2

PAGE 1 தொடர்ச்சிகள்

# அரியநேத்திரன் அணி மறுத்தது

எதிர்காலத்தில் இது போன்ற அழைப்புகளை ஏற்று சந்திப்புகளில் கலந்து கொள்வது தொடர்பான முடிவை பொதுக் கட்டமைப்பு கூடி முடிவெடுக்கும் என தமிழ் தேசிய பொது கூட்டமைப்பின் பிரதிநிதிகள் தீர்மானித்துள்ளனர்.

இந்நிலையில், இந்த அழைப்பு தொடர்பில், பொதுக்கட்டமைப்பின் முக்கியஸ்தரும் ஈ. பி. ஆர். எல் .எப் செயலாளர் நாயகமுமான சுரேஷ் பிரேமச்சந்திரன் கருத்து தெரிவிக்கையில்,

ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க தமிழ் பொதுக் கட்டமைப்பினை பேச்சுவார்த்தைக்கு அழைத்திருப்பதாக ஜனாதிபதி செயலகத்திலிருந்து தொலைபேசி அழைப்பு வந்திருந்த போதிலும் பேச்சுவார்த்தைக்கான காரணம் தெரிவிக்கப்படாமையினால் நாம் அந்த சந்திப்பில் கலந்து கொள்ளவில்லை என்றார்.

ஜனாதிபதி செயலகத்திலிருந்து தமிழ் பொதுக் கட்டமைப்பினருடன் கலந்துரையாட வேண்டும் என்று அழைப்பு ஒன்று கிடைக்கப்பெற்று இருந்தது. எனினும் என்ன காரணத்திற்காக இந்த அழைப்பு விடுக்கப்படுகிறது என்று கேட்டபோது அது தொடர்பில் அவர்கள் உரிய பதிலை வழங்காததுடன் அறிந்து கூறுவதாக தெரிவித்திருந்தனர்.

ஆகவே, இதுவரை அவர்கள் அதற்கான காரணத்தினை எமக்கு அறிவித்திருக்கவில்லை. இந்நிலையில் ஒரு திட்டமிடப்படாமல் நாம் இந்த பேச்சுவார்த்தையில் கலந்து கொள்வதில் அர்த்தம் இல்லை என்பதன் காரணமாக அந்த சந்திப்பில் கலந்து கொள்வதில்லை என்ற முடிவுக்கு வந்திருக்கிறோம்.

எனினும், இந்த விடயம் தொடர்பில் ஜனாதிபதி செயலகத்திற்கு மின்னஞ்சல் ஊடாக தகவல் ஒன்றினையும் அனுப்பி வைத்துள்ளோம்.

அதாவது பேச்சுவார்த்தைக்கு அழைப்பதற்கான காரணத்தினை தெரிவிக்கும் பட்சத்தில் அதற்கான தயாரிப்புகளுடன் நாம் கலந்து கொள்வதற்கான வாய்ப்புகள் ஏற்படும். எனவே அது தொடர்பில் அறிவிக்கும் பட்சத்தில் அந்த பேச்சுவார்த்தையில் கலந்து கொள்வது தொடர்பில் நம்மால் பரிசீலிக்க முடியும் என அறிவித்துள்ளோம்.

ஆகவே இது தொடர்பான தகவல் கிடைக்கும் பட்சத்தில் நாம் பேச்சுவார்த்தைக்கு போவது தொடர்பில் சிந்திப்போம் என்றார். சில தினங்களுக்கு முன்னர் தமிழ் தேசிய பொது கூட்டமைப்பின் மூலம் தமிழ் பொது வேட்பாளராக முன்னாள் பாராளுமன்ற உறுப்பினர் பாக்கியசெல்வம் அரியநேத்திரன் அறிவிக்கப்பட்டிருந்தமை குறிப்பிடத்தக்கது.



## தாலி கொள்ளையா? மறுத்தது நிர்வாகம்

எனினும், 2010ஆம் ஆண்டு ஆலயத்தினால் கொள்வனவு செய்யப்பட்ட 3 1/4 பவுன் எடைகொண்ட தாலியும் கொடியுமே காணாமல் போயிருப்பதாக திருகோணேஸ்வரர் ஆலய பரிபாலண சபையின் செயலாளர் ஊடகம் ஒன்றுக்கு குறிப்பிட்டுள்ளார். அத்துடன் காணாமல் போன குறித்த 3 1/4 பவுன் எடைகொண்ட தாலி மற்றும் கொடியை மீளப் பெற்றுத் தருவதாக குறித்த ஆலயத்தின் குருமார்களால் உறுதியளிக்கப்பட்டுள்ளதாகவும் அவர் குறிப்பிட்டார்.

## ராஜபக்ஷ அணிக்குள் கருத்து முரண்பாடு



முன்னாள் சபாநாயகர் சமல் ராஜபக்ஷவும், இராஜாங்க அமைச்சர் ஷசீந்திர ராஜபக்ஷவும் விக்கிரமசிங்கவுக்கு ஆதரவளிப்பதுடன் அவருக்கே கட்சி ஆதரவளிக்கவேண்டும் என்ற நிலைப்பாட்டை கொண்டுள்ளனர் என தகவல்கள் வெளியாகியுள்ளன.

யோசித ராஜபக்ஷ, ரோகித ராஜபக்ஷவின் சந்தைப்படுத்தல் நிறுவனத்தை சேர்ந்த குழுவிடம் ரணில் விக்கிரமசிங்கவின் பிரசாரத்தை முன்னெடுக்கும் பொறுப்பு வழங்கப்பட்டுள்ளதாகவும் தகவல்கள் வெளியாகியுள்ளன.

## சஜித்துடன் சுதர்ஷனி சங்கமம்

பெர்னாண்டோபுள்ளே முன்பு சிறைச்சாலைகள் மறுசீரமைப்பு மற்றும் கைதிகள் புனர்வாழ்வு இராஜாங்க அமைச்சராகவும் பதவி வகித்தார்.

## நல்லூரில் ஒழுங்கை அத்துமீறிய பிக்குகள்



சைவர்களின் ஆலயத்தில் கூட பிக்குகள் அத்துமீறி வாகனங்களுடன் உள்நுழைந்து, பாதணிகளுடன் ஆலய வளாகத்தில் காலடி வைத்தமை இன மத முரண்பாட்டை தோற்றுவிக்க கூடிய சந்தர்ப்பம் உள்ளது.

இவ்வாறான முகம் சுழிக்க வைக்கும் செயற்பாடுகள் இனிமேல் இடம்பெற கூடாது என மக்கள் கோரிக்கை விடுத்துள்ளனர்.



## சஜித் “ராஜபக்ஷ” ஆகிவிட்டது

வீடு வீடாகச் செல்லுதல், வாக்கெடுப்பு நிலையங்களில் முகவர்களை நியமித்தல், ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவின் ஜனாதிபதித் தேர்தல் பிரசாரங்களை ஒழுங்கமைத்தல், சம்பந்தப்பட்ட தொகுதி மட்டத்தில் ஒழுங்கமைத்தல் மற்றும் வழிநடத்துதல் ஆகியன இந்தத் தொகுதிகளின் கூட்டுக் குழுக்களிடம் ஒப்படைக்கப்பட்டுள்ளன.

ஜனாதிபதிக்கு ஆதரவான கம்பஹா மாவட்ட பிரதிநிதிகளை உள்ளடக்கிய கம்பஹா மாவட்ட ஜனாதிபதி தேர்தல் கூட்டு வழிநடத்தல் குழுவின் நியமனம் கடந்த வியாழக்கிழமை (08) இடம்பெற்றது. கம்பஹா மாவட்ட மொட்டு கட்சி அமைச்சர் பிரசன்ன ரணதுங்க தலைமையில் நடைபெற்றது.

ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியின் கம்பஹா மாவட்டத் தலைவர் லசந்த அழகியவன்ன, ஐக்கிய தேசியக் கட்சியின் கம்பஹா மாவட்டத் தலைவர் ருவான் விஜேவர்தன உள்ளிட்ட கம்பஹா மாவட்டத்தைப் பிரதிநிதித்துவப்படுத்தும் அனைத்து அரசியல் கட்சிகளின் மாவட்டத் தலைவர்களும் இந்தக் கூட்டத்தில் கலந்துகொண்டனர்.

சில காலம் அரசியல் ரீதியாக ஒதுங்கியிருந்த இவர்கள் ஒரே நோக்கத்திற்காக ஒன்று சேர்ந்தது ஒரு தனிச் சம்பவம். ஜனாதிபதியின் தேர்தல் செயற்பாடுகள் தொடர்பில் கட்சித் தலைவர்களின் பங்களிப்புடன் நியமிக்கப்பட்ட முதலாவது கூட்டுக் குழு இதுவாகும்.

இதன்போது ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவின் வெற்றிக்காக மாவட்டத்தில் செயல்படுத்தப்பட்டுள்ள வேலைத்திட்டம் தொடர்பில் நீண்ட நேரம் கலந்துரையாடப்பட்டது. லங்கா பொதுஜன பெரமுனவை பிரதிநிதித்துவப்படுத்திய பல தலைவர்கள் ஒன்றிணைந்துள்ளதாகவும், தற்போது கட்சியின் இரண்டாவது அணியும் ஜனாதிபதியின் வெற்றிக்காக ஒன்றிணைந்து வருவதாக நகர அபிவிருத்தி மற்றும் வீடமைப்பு அமைச்சர் பிரசன்ன ரணதுங்க இங்கு தெரிவித்தார்.

ரணில் விக்கிரமசிங்கவிடம் இருந்து ராஜபக்ஷ துண்டு விலகியதால், இன்னும் சில நாட்களில் ஜனாதிபதிக்கு அதிகளவான மக்கள் ஆதரவளிப்பார்கள் என அமைச்சர் வலியுறுத்தினார்.

அமைச்சர் மேலும் கூறியதாவது:

“ கீரி - பாம்பாக அரசியலில் சிறிது காலம் இருந்த நாம் ரணில் விக்கிரமசிங்கவின் வெற்றிக்காக ஒன்றுபட்டது நாட்டின் எதிர்காலத்திற்காக எடுக்கப்பட்ட ஒரு சிறப்பான நடவடிக்கையாகும். இது தொழில்துறையில் ஒரு திருப்புமுனையாக அமையும், இது ஒரு புதிய அரசியல் கலாச்சாரம். நாங்கள் எந்த அரசியல் கட்சியின் சின்னத்தையும் எடுக்கவில்லை. நாம் ஒன்றாக இணைந்து வெற்றி பெறுவோம் என்பதே கருப்பொருள். ஆனால் எங்களுக்குள் நெருக்கடியை ஏற்படுத்த சில குழுக்கள் சதி செய்கின்றன. ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவை வெற்றி பெறச் செய்வதே எங்களின் ஒரே நோக்கம். அதற்கு அனைவரின் ஆதரவும் தேவை.

கடந்த பொதுத் தேர்தலில் 20 இலட்சம் வாக்குகள் ஐக்கிய தேசியக் கட்சியின் பெரும்பான்மை வாக்குகள் பயன்படுத்தப்படவில்லை. ஏனெனில் ஜனாதிபதித் தேர்தலில் தோல்வியடைந்த நிலையில் அவர்கள் பொதுத் தேர்தலில் வாக்களிக்கவில்லை. அவர்களை வாக்களிப்பு நிலையத்திற்கு அழைத்து வருவதற்கான வேலைத்திட்டத்தை நடைமுறைப்படுத்துகின்றோம். குறைந்தபட்சம் 10 இலட்சம் வாக்குகளை வாகக்கெடுப்பு நிலயங்களுக்கு கொண்டு வர வேண்டும். அந்த வாக்குகளைப் பெற, வீடு வீடாகச் சென்று மக்களுக்குத் தெரிவிக்க வேண்டும். இது மிகவும் ஒழுங்கமைக்கப்பட வேண்டும்.

பொருட்களை வழங்குவதன் மூலம் வாக்குகளைப் பெற முடியாது என்பதை நினைவில் கொள்ளுங்கள். 2015 இல் பட்டு துணி கூட கொடுத்தோம். ஆனால் மஹிந்த தோற்றுப் போனார்.

அப்போது இருந்த சித்தாந்தத்தின் மூலம் மைத்திரிபால சிறிசேன வெற்றி பெற்றார். நல்லாட்சி என்ற சித்தாந்தம் அப்போதுதான் உருவானது. தற்போது ரணில் ராஜபக்ஷ என்ற துண்டு அகற்றப்பட்டுள்ளது. இப்போது சஜித் ராஜபக்ஷவாகிவிட்டார். அதற்காகவே தம்மிக்க பெரேரா அழைத்து வரப்பட்டார். அதற்கு தான் பயன்படுத்தப்படுவதை உணர்ந்த தம்மிக்க பெரேரா அங்கிருந்து வெளியேறினார்.

திரு பசில் ராஜபக்ஷ தொடர்ந்து எங்களுடன் இணைந்து பணியாற்றினார். ஆனால் பாதியிலேயே வெளியேற முடிவு செய்தார். நன்றியுடன், நாங்கள் இங்கே நிறுத்திக் கொண்டோம். என்ன பிரச்சனை வந்தாலும் எங்களால் திரும்ப முடியாது. ரணில் விக்கிரமசிங்கவின் ஜனாதிபதி பதவியை மீண்டும் ஜனாதிபதி ஆக்க நாங்கள் திரும்பிப் பார்க்கிறோம். மாவட்ட அலுவலகங்கள் மற்றும் தொகுதி அலுவலகங்களை நிறுவுவதில் பொதுவான இடத்தைப் பெற வேண்டும். ஐக்கிய தேசியக் கட்சியைச் சேர்ந்தவர்கள் எமது வீட்டில் உள்ள அலுவலகத்திற்கு வர விரும்புவதில்லை. ஏனென்றால் கடந்த காலத்தில் எங்களுக்கிடையில் விரிசல் இருந்தது. இது ஒரு புதிய அரசியல் கலாச்சாரத்தை உருவாக்குகிறது. நாங்கள் ஒப்புக்கொண்டாலும், கிராமம் இன்னும் அப்படி வேலை செய்யப் பழகவில்லை. பழகும் வரை பொதுவான பகுதிகளை அடையாளம் காண வேண்டும்.

ஜனாதிபதி பங்கேற்கும் நான்கு பிரதான கூட்டங்களை கம்பஹா மாவட்டத்தில் நடத்துவதற்கு நாங்கள் நம்புகிறோம் என்றார்.

## “சஜித்தை வீழ்த்துவதே நால்வரின் இலக்காகும்”

ஞாயிற்றுக்கிழமை (11) நடைபெற்ற ஐக்கிய மக்கள் சக்தியின் ஊடக சந்திப்பில் கலந்துகொண்டு கருத்துரைத்த போதே பாராளுமன்ற உறுப்பினர் நளின் பண்டார மேற்கண்டவாறு தெரிவித்தார்.

ஜனாதிபதி ரணில் விக்ரமசிங்க கண்டியில் வைத்து தோட்டத் தொழிலாளர்களின் சம்பளத்தை அதிகரிக்க நடவடிக்கை எடுப்பேன். நான் தான் தற்போது தொழில் அமைச்சர் கூறி மீண்டும் தோட்ட மக்களை ஏமாற்றும் நடவடிக்கையில் ஈடுபட்டுள்ளார்.

VFS கொடுக்கல் வாங்கல் மோசடியை அமைச்சர் டிரான் அலஸ் சுத்தப்படுத்த முயற்சிக்கிறார். செப்டம்பர் 21 சஜித் பிரேமதாசவின் வெற்றியை தொடர்ந்து முதலாவது நாம் இந்த VFS கொடுக்கல் வாங்கல் மோசடி குறித்தே விசாரணை நடத்துவோம் என்றார்.



ரணில் விக்ரமசிங்க, மஹிந்த ராஜபக்ஷ, நாமல் ராஜபக்ஷ, அநுர குமார என சகலரினதும் ஒரே இலக்கு சஜித் பிரேமதாசவே. சஜித் பிரேமதாசவை தோற்கடிக்க வேண்டும் என்பதே இவர்களின் நோக்கமாகும். அதன் ஒரு பகுதியாகவே ரணில் விக்ரமசிங்கவின் ஒப்பந்தம் ஒன்றின் பிரகாரமே சரத் பொன்சேகாவும் ஜனாதிபதி தேர்தலில் போட்டியிடுகிறார் என்றார்.



## ரூ.1,700 குறித்து இன்று பேச்சு

இலங்கை தொழிலாளர் காங்கிரஸ் ஏற்பாட்டில் கண்டி ‘கரலிய’ அரங்கத்தில் சனிக்கிழமை (10) நடைபெற்ற தோட்ட தொழிற்சங்கங்களின் இளம் தலைவர்களின் பொதுக்கூட்டத்தில் ஜனாதிபதி ரணில் விக்ரமசிங்க அறிவித்தார்.

தொழில் அமைச்சராக பணியாற்றிய மனுஷ நாணயக்கார, உயர்நீதிமன்ற தீர்ப்பை அடுத்து பாராளுமன்ற உறுப்பினர் பதவியை இழந்துள்ளார். இதனையடுத்து, அவர் வகித்த தொழில் அமைச்சின் பொறுப்புகளை ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க தனக்கு கீழ் கொண்டுவந்துள்ளார் என்பது குறிப்பிடத்தக்கது.

## வியாழனன்று விசேட பாதுகாப்பு

இந்த பாதுகாப்பு திட்டங்களுக்கு விசேட அதிரடிப்படையினரின் உதவியும் பெற்றுக்கொள்ளப்படவுள்ளதாக பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

இராஜகிரியவில் உள்ள தேர்தல் அலுவலகத்தை அண்மித்த வீதிகளில் எதிர்வரும் 15ஆம் திகதி விசேட போக்குவரத்துத் திட்டம் அமுல்படுத்தப்படவுள்ளது.

இதேவேளை, வேட்புமனுக்களை தாக்கல் செய்யும் வேட்பாளர்களுடன் வருகைதரும் பிரதிநிதிகளின் எண்ணிக்கையும் மட்டுப்படுத்தப்பட்டுள்ளது.

ஜனாதிபதி வேட்பாளருடன் கட்சியின் செயலாளர் உட்பட இருவர் மாத்திரமே வேட்புமனு ஏற்கும் அலுவலகத்திற்குள் பிரவேசிக்க அனுமதியளிக்கப்பட்டுள்ளதாக தேர்தல்கள் ஆணையாளர் நாயகம் சமன் ஸ்ரீ ரத்நாயக்க குறிப்பிட்டுள்ளார்.

அவர்களைத் தவிர மேலும் மூவர் தேர்தல் அலுவலக வளாகத்திற்குள் பிரவேசிப்பதற்கு அனுமதியளிக்கப்பட்டுள்ளது.

எதிர்வரும் 15ஆம் திகதி காலை 9 மணி முதல் முற்பகல் 11 மணி வரை ஜனாதிபதி தேர்தலுக்கான வேட்புமனுக்கள் ஏற்றுக்கொள்ளப்படவுள்ளன.

## தவறான பாதையில் ஏறியவர் மரணம்



நான்கு பேர் கொண்ட குழுவொன்று மலை ஏற சென்றதாகவும் அதில் ஒருவர் உயிரிழந்துள்ளதாகவும் பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

தெஹியோவிட்ட முருத்தெட்டுவ பிரதேசத்தைச் சேர்ந்த இரண்டு பிள்ளைகளின் தந்தையே (வயது 37) உயிரிழந்துள்ளார்.

மனைவியிடம் சொல்லாமல் வீட்டை விட்டு வெளியேறிய அவர், நண்பர்கள் நான்கு பேருடன் இந்த சுற்றுலா வந்தது தெரியவந்துள்ளது.

# “பந்தை வீசுகின்றனர்”

எஸ்.கணேசன்



மலையக பெருந்தோட்டத் தொழிலாளர்களுக்கு சம்பள உயர்வை பெற்றுக்கொடுக்க முடியவில்லை என்பதற்காக தற்போது பந்தை என் பக்கம் வீசுகின்றனர் என தொழிலாளர் தேசிய சங்கம் மற்றும் தொழிலாளர் தேசிய முன்னணியின் தலைவர் பழனி திகாம்பரம் தெரிவித்துள்ளார்.

எதிர்வரும் ஜனாதிபதித் தேர்தலில் தொழிலாளர் தேசிய சங்கம் மற்றும் தொழிலாளர் தேசிய முன்னணி ஆகியன ஐக்கிய மக்கள் சக்தியின் ஜனாதிபதி வேட்பாளர் சஜித் பிரேமதாசாவை ஆதரிக்கத் தீர்மானித்துள்ளது.

இது தொடர்பாக தொழிலாளர் தேசிய சங்கம் மற்றும் தொழிலாளர் தேசிய முன்னணியின் கூட்டம் சனிக்கிழமை (10) ஹட்டனில் இடம்பெற்றது. இதன்போதே அவர் மேற்கண்டவாறு குறிப்பிட்டுள்ளார்.

மேலும் கருத்து தெரிவித்த பழனி திகாம்பரம்,

“மலையக பெருந்தோட்டத் தொழிலாளர்களுக்கு நாள் சம்பளமாக 1,700 ரூபாய் கிடைக்கப்பெறும் என்று ஜனாதிபதி ரணில் விக்ரமசிங்கவும், தொழில் அமைச்சராக இருந்த மனுஷ நாணயக்காரவும் வீரவசனம் பேசினர். எனினும், அந்த சம்பள உயர்வு இன்னும் கிடைக்கப்பெறவில்லை.

இந்நிலையில், கம்பனிக்காரர்களிடம் கூறி வழக்கு போடச் சொன்னதாக என்மீது மனுஷ நாணயக்கார இப்போது குற்றச்சாட்டு முன்வைக்கின்றார். இந்த குற்றச்சாட்டை நான் நிராகரிக்கின்றேன். மலையக மக்களை நான் ஒருபோதும் காட்டிக்கொடுத்தது கிடையாது.

தங்களால் சம்பள உயர்வை பெற்றுக்கொடுக்க முடியவில்லை என்பதற்காக தற்போது பந்தை என் பக்கம் வீசுகின்றனர், ஜனாதிபதியும், மனுஷ நாணயக்காரவும் பொய்யர்கள் என்பது உறுதியாகியுள்ளது.

ஜனாதிபதி தேர்தலில் சஜித் பிரேமதாசவே வெற்றிபெறுவார், மலையக மக்களும் அவருக்கே வாக்களிப்பார்கள், மாறாக துரோகம் செய்தவர்களுக்கு வாக்களிக்கமாட்டார்கள், சஜித் பிரேமதாச ஆட்சியில் காணி உரிமை ,வீட்டு உரிமை, கல்வி உரிமை என அத்தனை உரிமைகளும் கிடைக்கப்பெறும். முடிந்தால் மலையக மக்கள் வாக்குகளை பெற்றுக்காட்டுமாறு ஜனாதிபதிக்கு சவால் விடுக்கின்றேன்” என குறிப்பிட்டுள்ளார்.

மேலும், இந்தத் தீர்மானம் தொடர்பாகவும் தேர்தல் பிரசார நடவடிக்கைகளை முன்னெடுப்பது தொடர்பாகவும் தொழிலாளர் தேசிய சங்கம் மற்றும் தொழிலாளர் தேசிய முன்னணியின் உயர் பீட முக்கியஸ்தர்கள், அமைப்பாளர்கள், இணைப்பாளர்கள், மகளிர் மற்றும் இளைஞர் அணி இணைப்பாளர்கள், பணிமனை உத்தியோகஸ்தர்கள், மாவட்டத் தலைவர்கள், தலைவிகள், உள்ளூராட்சி மன்றங்களின் முன்னாள் உறுப்பினர்கள் மற்றும் வேட்பாளர்கள், நகர கமிட்டி உறுப்பினர்கள் ஆகியோருக்கு இந்தக் கூட்டத்தின் போது விளக்கமளிக்கப்பட்டுள்ளது.

அாத்துடன், தொழிலாளர் தேசிய சங்கம் மற்றும் தொழிலாளர் தேசிய முன்னணியின் தலைவர் பழனி திகாம்பரம் மற்றும் பிரதித் தலைவர் எம்.உதயகுமார் ஆகியோரும் பல்வேறு விடயங்கள் குறித்து விளக்கமளித்துள்ளனர்.

ஜனாதிபதித் தேர்தலில் முதல் மலையக தமிழர் போட்டி

# “வெல்ல அல்ல சொல்ல”

## திலகர் தெரிவிப்பு; உரிமைகளுக்கான குரல் என்றார்

சுதந்திர இலங்கையில் குடியுரிமை பறிக்கப்பட்டதால் மூன்று தசாப்த காலமாகப் பல அரசியல் உரிமைகள் மறுக்கப்பட்ட சமூகமாக வாழும், மலையகத் தமிழினத்தினை இலங்கையின் அர்த்தமுள்ள குடிகளாக ஆக்குவதற்கு அவசியமான தேசிய கொள்கைத் தீர்மானங்களைக் கொள்கை வகுப்பாளர்களுக்கும், ஆட்சியாளர்களுக்கும் வலியுறுத்தும் விதமாக 2024இல் ஜனாதிபதித் தேர்தல் களத்தைப் பயன்படுத்தத் தீர்மானம் எடுத்துள்ளதாக மலையக அரசியல் அரங்கம் அறிவித்துள்ளது.

அரங்கத்தின் அந்த உயர்மட்ட தீர்மானத்தின் அடிப்படையில் எதிரவரும் ஜனாதிபதி தேர்தலில் அரங்கத்தின் தலைமை ஒருங்கிணைப்பாளரும் முன்னாள் நுவரெலியா மாவட்ட பாராளுமன்ற உறுப்பினருமான மயில்வாகனம் திலகராஜா சுயாதீன வேட்பாளராகப் பங்கு பெறுவதற்கான கட்டுப்பணம் செலுத்தப்பட்டுள்ளது.

‘ஜனாதிபதி பதவியை வெல்வதற்காக அல்ல, மலையகத் தமிழ் மக்களுக்காக வெல்ல வேண்டிய பல உரிமைகளை தேசிய தளத்தில் சொல்வதற்காக’ எனும் எண்ணக்கருவை முன்வைத்து ஜனாதிபதி தேர்தல் களத்தில் பங்குகொள்ளும் மயில்வாகனம் திலக ராஜா மலையக அரசியல் வரலாற்றில் முதன்முறையாக இலங்கையின் நிறைவேற்றதிகார ஜனாதிபதித் தேர்தலில் வேட்பாளராகக் களம் இறங்கும் முதலாவது மலையகத் தமிழர் எனும் அடையாளத்தையும் பெறுகிறார்.

2000ஆம் ஆண்டு கொழும்புப் பல்கலைக் கழகத்தில் தனது பட்டப்படிப்பை நிறைவு செய்த காலம் முதல் தன்னை முழுமையான இலக்கிய, சமூக, அரசியல் செயற்பாட்டாளராக ஈடுபடுத்திக் கொண்ட திலகர் 2015-2020 காலப்பகுதியில் இலங்கை பாராளுமன்ற உறுப்பினராக செயற்பட்டார்.



தனது நான்கரையாண்டு பாராளுமன்ற உறுப்பினர். காலத்தில் நுவரெலியா மாவட்டத்தில் சிறப்பாகச் செயற்பட்ட உறுப்பினர் என அங்கீகரிக்கப்பட்டதுடன், 225 பாராளுமன்ற உறுப்பினர்களில் முதல் தடவையிலேயே 29ஆவது இடத்திற்கும் முன்னேறி இருந்தார்.

கடந்த பொதுத் தேர்தலின்போது ஏற்பட்ட உட்கட்சி முரண்பாடுகள் காரணமாக பொதுத் தேர்தலில் போட்டியிடாததுடன், கட்சி, கூட்டணியின் சகல பொறுப்புகளில் இருந்தும் விலகினார்.

கடந்த மூன்றாண்டுக் காலமாக ‘மலையக அரசியல் அரங்கம்’ எனும் சமூக-அரசியல் தளத்தை நிறுவி அடுத்த தலைமுறையினருக்கான அரசியல் செல்நெறியை வழிநடத்தும் தலைமை ஒருங்கிணைப்பாளராக செயற்பட்டு வருகிறார்.

நுவரெலியா மாவட்ட பிரதேச செயலக அதிகரிப்பு விடயத்தில் காட்டப்பட்ட அநீதிக்கு எதிராக தனது முதலாவது ஆண்டில் நாடு தழுவிய அகிம்சா வழி போராட்டத்தை முன்னெடுத்த மலையக அரசியல் அரங்கம் அதில் வெற்றியையும் கண்டது.

தனது இரண்டாவது ஆண்டில் அறிவிக்கப்பட்ட உள்ளூராட்சி மன்ற தேர்தலில் நுவரெலியா மாவட்டத்தில் புதிதாக உருவாக்கப்பட்ட அக்கரப்த்தன, கொட்டகல, நோர்வூட், மஸகெலியா ஆகிய நான்கு பிரதேச சபைகளில் போட்டியிடுவதற்கான வேட்பாளர்களையும் முன்னிறுத்தியது. தனது பாராளுமன்ற பதவிக் காலத்தில் தான் முன்னின்று திருத்தம் செய்த பிரதேசச் சபை சட்டத்தைப் புதிதாக உருவாக்கப்பட்ட பிரதேச சபைகளில் நடைமுறைப்படுத்தும் எண்ணத்துடன் தேர்தல் களத்தில் இறங்கிய போதும் அந்த தேர்தல் நடாத்தப்படாமலே ஒத்திவைக்கப்பட்டுள்ளது.

“மலையகத் தொழிலாளர்களையும் சிறு தோட்ட உடமையாளராக்கு” எனும் தொடர் பிரசார இயக்கத்தைத் தனது மூன்றாவது ஆண்டிலே முன்னெடுத்துவரும் மலையக அரசியல் அரங்கம் அறிவிக்கப்பட்டுள்ள ஜனாதிபதி தேர்தலிலும் களம் இறங்கி மலையகத் தமிழ் மக்களின் வென்றெடுக்கப்பட வேண்டிய பல அரசியல் உரிமைகள் குறித்த தேசிய கொள்கை வகுப்பாளர்களினதும் ஆட்சியாளர்களினதும் கவனத்தைப் பெறுவதை இலக்காகக் கொண்டு இந்த தீர்மானத்தை எடுத்துள்ளதாக அறிவித்துள்ளது.

# ஓரினச்சேர்க்கைக்கு எதிர்ப்பு



ஒற்றுமைக்கான சர்வமத கூட்டமைப்பின் ஏற்பாட்டில், “ஓரினச்சேர்க்கையை தடை செய்ய வேண்டும்” என கோரி கொள்ளுப்பிட்டியில் அமைந்துள்ள அமெரிக்கத் தூதரகத்தின் முன்பாக மத குருமார்கள் உள்ளிட்டோர் ஞாயிற்றுக்கிழமை (11) ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டனர்.






# செயலமர்வு

தீஷான் அஹமட்அ

நாட்டில் அறிமுகப்படுத்தப்பட்டுள்ள நிகழ்நிலை காப்புச் சட்டம் தொடர்பாக திருகோணமலை மாவட்ட ஊடகவியலாளர்களுக்கு தெளிவூட்டும் இரண்டு நாள் செயலமர்வு திருகோணமலை மல்லிகா விடுதியில் 10,11 திகதிகளில் இடம்பெற்றது.

திருகோணமலை எழுத்தாணி அமைப்பின் ஏற்பாட்டில் அதன் தலைவர் வடமலை ராஜ்குமார் தலைமையில் இடம்பெற்ற இச் செயலமர்வில், வளவாளர்களாக சட்டத்தரணி ஐங்கரன் மற்றும் விரிவுரையாளரும், ஊடகவியலாளருமான அருள் சஞ்சித் உள்ளிட்டோர் பங்குபற்றி விரிவுரை வழங்கியிருந்தனர். இதில் திருகோணமலை மாவட்டத்தைச் சேர்ந்த 20க்கும் மேற்பட்ட ஊடகவியலாளர்கள் பங்குபற்றியிருந்தனர்.

செயலமர்வில் நிகழ்நிலை காப்புச் சட்டம் என்றால் என்ன? அதன் சாதகபாதங்கள் என்ன?, செய்தி அறிக்கையிடலில் ஊடகவியலாளர்கள் பின்பற்ற வேண்டிய விடயங்கள் உள்ளிட்ட பல விடயங்கள் தொடர்பாக தெளிவூட்டப்பட்டது.

# கரையொதுங்கிய நண்டுகள்



அ.அச்சுதன்

திருகோணமலை நகரில் உள்ள கடற்கரையில் சனிக்கிழமை (10) அதிகாலை முதல் ஆயிரக்கணக்கான சிறு சிவப்பு நிறத்திலான நண்டுகள் இறந்த நிலையில் கரையொதுங்கியுள்ளன.

சனி மற்றும் ஞாயிற்றுக்கிழமைகளில் இப்பிரதேசத்திற்கு கூடுதலான சுற்றுலாப் பயணிகள் வருகின்ற நிலையில் இவ்வாறான நிகழ்வு ஒன்று இடம்பெற்றுள்ளது.

சுமார் ஐந்து தொடக்கம் ஆறு கிலோ மீட்டர் நீளமுள்ள இந்த கடற்கரையில் மூன்று தொடக்கம் 4 கிலோ மீட்டர் தூரம் வரை இவ்வாறான சிவப்பு நிற நண்டுகள் இறந்த நிலையில் கரை ஒதுங்கி உள்ளன என்பதும் குறிப்பிடத்தக்கது.

மஸ்கெலியா விபத்தில்

# இருவர் பலி; இருவர் காயம்

செ.தி.பெருமாள்

மஸ்கெலியா, நகரில் இருந்து மரே தோட்ட வலதள பிரிவுக்கு சென்ற முச்சக்கரவண்டி ஒன்று, அதிகவேகம் காரணமாக கட்டுப்பாட்டை இழந்த நிலையில், முன்னால் வந்த வாகனத்தில் மோதுண்டு புரண்டு விபத்துக்கு உள்ளானதில் இருவர் சம்பவ இடத்திலேயே உயிரிழந்துள்ளனர்.

மஸ்கெலியா-நல்லதண்ணி பிரதான வீதியின், பிரவுன்லோ தோட்டப் பகுதியில் இடம்பெற்ற இந்த விபத்தில், மேலும் இரண்டு பேர் காயடைந்து மஸ்கெலியா மாவட்ட வைத்தியசாலைக்கு கொண்டு செல்லப்பட்டு, பின்னர் மேலதிக சிகிச்சைக்காக டிக்கோயா-கிளங்கன் ஆதார வைத்தியசாலைக்கு மாற்றப்பட்டுள்ளனர்.

இவ்விபத்து குறித்து மஸ்கெலியா பொலிஸ் நிலைய பொறுப்பதிகாரி விசாரணை நடத்தி வருகின்றனர்.



# பூனைப்பிட்டியில் மீன்பிடி உபகரணங்களுக்கு தீ வைப்பு

ரஸீன் ரஸ்மின்

புத்தளம் உடப்பு பொலிஸ் பிரிவுக்குட்பட்ட பூனைப்பிட்டி கிராமத்தில் உள்ள தோட்டமொன்றில் வைக்கப்பட்டிருந்த மீன்பிடி உபகரணங்களுக்கு இனந்தெரியாதோரால் வெள்ளிக்கிழமை (09) இரவு தீவைக்கப்பட்டுள்ளதாக தெரிவிக்கப்படுகிறது.

இந்த சம்பவம் தொடர்பில், உடப்பு, பூனப்பிட்டி பகுதியைச் சேர்ந்த வை.கே.முத்தையா என்பவர் உடப்பு பொலிஸில் முறைப்பாடு செய்துள்ளார்.

தோட்டத்தில் நிறுத்தி வைக்கப்பட்டிருந்த உழவு இயந்திரம், கரவலை, கம்மான் கயிறு, மீன்பிடி வலை, மடி உள்ளிட்டவை இந்த தீயினால் முற்றாக எரியூட்டப்பட்டுள்தாகவும் முறைப்பாட்டில் குறிப்பிட்டுள்ளார்.

இதனால், சுமார் 75 இலட்சத்திற்கும் கூடுதலான பொருட்கள் முழுமையாக எரிந்து



நாசமாகியுள்ளதாகவும் அதன் உரிமையாளர் கூறியுள்ளார். சம்பவம் நடந்த போது, குறித்த தோட்டத்தில் எவரும் இருக்கவில்லை எனவும் தெரிவிக்கப்படுகிறது.

# மீனவர்கள் மகிழ்ச்சி

ரீ.எல்.ஜவ்பர்கான்

கிழக்கு மாகாணத்தில் நிலவிய கடும் வரட்சியைடுத்து, சனிக்கிழமை (10) பெய்த மழையால் அதிகளவிலான சூடை மீன்கள் பிடிபட்டதாக மீனவர்கள் தெரிவித்துள்ளனர்.

இதற்கமைய, காத்தான்குடி ஏத்துக்கால் கடற் பிரதேசத்தில் ஞாயிற்றுக்கிழமை (11) காலை மீனவர்கள் பெருமளவிலான சூடை மீன்களை பிடித்து விற்பனையில் ஈடுபட்டனர். ஒரு கிலோ கிராம் 300 ரூபாய்க்கு விற்பனை செய்யப்பட்டுள்ளது.

சாதாரணமான நேரங்களில் குறித்த மீன் ஒரு கிலோ கிராம் 700 ரூபாய் முதல் 800 ரூபாய் வரை விற்பனையானது குறிப்பிடத்தக்கது.



# அதிபர் காரியாலயத்தை கொளுத்தியோருக்கு வலை

உமா மகேஸ்வரி

இரத்தினபுரி, எந்தான பொலிஸ் பிரிவிற்குட்பட்ட மடலகம தமிழ் வித்தியாலயத்தின் அதிபர் காரியாலயத்திற்கு இனந்தெரியாத சிலர் சனிக்கிழமை(10) மாலை தீ வைத்ததால் அங்கிருந்த மிக முக்கியமான ஆவணங்கள் அனைத்தும் முற்றாக எரிந்து நாசமாகியுள்ளதாக பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

பாடசாலை கட்டிடத்தில் இருந்து திடீரென பாரிய புகை வெளியேறியதை கவனித்த பிரதேச மக்கள், சம்பவ இடத்திற்கு சென்று தீயை அணைத்து நிலைமையைக் கட்டுப்பாட்டில் கொண்டு வந்துள்ளனர்.



மூடப்பட்டிருந்த இப்பாடசாலையை உடைத்துக் கொண்டு உள்ளே சென்ற இனந்தெரியாத நபர்கள், அலுமாரியில் உள்ள அனைத்து ஆவணங்களையும் வெளியே எடுத்து கீழே போட்டுத் தீயிட்டுக் கொளுத்தியுள்ளதாக தெரியவந்துள்ளது.

இது தொடர்பில் எந்தான பொலிஸார் விசாரணைகளை முன்னெடுத்துள்ள போதிலும், இதுவரை யாரும் கைது செய்யப்படவில்லை என தெரிவிக்கப்பட்டுள்ளது.

# இன்றைய இளைஞர்களே நாளைய சமூகத்தின் தலைவர்கள்

நாடொன்று நல்வழியில் பயணிக்க வேண்டுமானால், அந்த நாட்டில் வாழும் இளைஞர்களின் வகிபாகம் மிகவும் இன்றியமையாதது. நாட்டின் வளர்ச்சிக்கும் எழுச்சிக்கும் இளைஞர்களே தூண்களாக நின்கின்றனர். நமது நாடு பொருளாதார நெருக்கடிக்குள் விழுந்திருந்தவேளை, ஆட்சி அதிகாரத்தில் இருந்தவர்களை துரத்தியடித்தமைக்கு இளைஞர்களின் எழுச்சியே பிரதான பங்கை வகித்தது.

பங்களாதேசத்தில் இளைஞர்களால் முன்னெடுக்கப்பட்ட அரசாங்கத்துக்கு எதிரான போராட்டம் அந்நாட்டில் ஆட்சி மாற்றத்துக்கு வித்திட்டுள்ளது, எனினும், சிறுபான்மையின சமூகத்தின் மீதான, அவர்களின் வழிபாட்டு தலங்கள் மீதான தாக்குதல்கள், போராட்டத்தின் நோக்கத்துக்கு கரும்புள்ளி இட்டு விட்டது எனலாம்.

வரலாற்றிலும் சரி, எதிர்காலத்திலும் சரி மாற்றத்தை ஏற்படுத்திய ஏற்படுத்த போகும் ஒரு கூட்டம் உண்டென்றால் அது இளைஞர்களால் மட்டுமே முடியும். பல நாடுகளிலும் பல சமூகங்களிலும் அந்த மாற்றத்தை இளைஞர்கள் உருவாக்கியிருக்கின்றனர். அவை பிற்காலத்தில் பாதை மாறி சென்றுவிட்டன.

இந்நிலையில்தான், சக்தி வாய்ந்த இளைஞர்கள் மத்தியில் நல்லெண்ணத்தை விதைக்கவும், அமைதி மற்றும் ஒற்றுமையை வளர்க்கவும், அவர்களின் சக்தியை ஒன்றிணைத்து உலக மாற்றத்தை கொண்டு வரவும் ஆண்டுதோறும் சர்வதேச இளைஞர்கள் தினம் கொண்டாடப்படுகிறது.

1965ம் ஆண்டிலிருந்து பல்வேறு இளைஞர் மேம்பாட்டு பணிகளை செய்து வந்த ஐ நா சபை உலக நாடுகளின் இளைஞர்களுக்கான பொறுப்பு அமைச்சர்கள் பங்கேற்ற மாநாட்டின் பரிந்துரையின் அடிப்படையில் 1999ம் ஆண்டு டிசம்பர் 17ம் திகதி ஆகஸ்ட் 12ஐ சர்வதேச இளைஞர் தினமாக ஏற்றுக்கொண்டது. அதன் பிறகு ஐ நா சபையின் தலைமையில் 2000ம் ஆண்டு முதல் ஆகஸ்ட் 12ஐ பல்வேறு உலக நாடுகள் இளைஞர்கள் மேம்பாட்டு தினமாக கொண்டாடி வருகின்றனர்.

ஒவ்வொரு ஆண்டும் ஒரு கருப்பொருளை மையமாக கொண்டு சர்வதேச இளைஞர்கள் தினம் கொண்டாடப்பட்டு வருகிறது. அந்த வகையில் 2024ம் ஆண்டுக்கான சர்வதேச இளைஞர்கள் தின கருப்பொருள் “ நிலையான வளர்ச்சிக்கான இளைஞர் டிஜிட்டல் பாதைகள்.” என்பதாகும்.

இளைஞர்கள் மத்தியிலான திறன் மேம்பாடு, அமைதி, ஒற்றுமை, இளைஞர்களின் உடல் நலம் ஆகியவற்றை ஊக்குவிக்கும் விதத்தில் ஒவ்வோர் அரசுகளும் இளைஞர் நல திட்டங்களை அறிமுகப்படுத்த வேண்டும் என்பதே இந்த நாளின் முக்கியமான நோக்கம்.

சமூக வளர்ச்சிக்கு உதவும் சமூக பொறுப்புள்ள நபர்களாக இளைஞர்களை வளர்க்க வேண்டும் எனது ஒட்டுமொத்த சமூக கடமை என்பதை உணர்த்தவும், இளைஞர்களின் பொறுப்புகள் மற்றும் கடமைகளை வலியுறுத்தவும் இந்த நாளில் பல்வேறு விழிப்புணர்வு நிகழ்வுகளும் நடத்தப்படும்.

விழிப்புணர்வு நிகழ்வுகளை ஆகக் குறைந்தது மூன்று மாதங்களுக்கு ஒரு தடவையேனும் முன்னெடுத்து ஞாபகமூட்டி, செயற்பாடுகளை முன்னெடுக்கவேண்டும். அதனூடாகவே, இளைஞர்கள் மத்தியில் விழிப்புணர்வை தக்கவைத்துகொள்ள முடியும். இல்லையேல், அன்றைய நாளோடு மறந்துவிடுவர்.

இன்றைய இளைஞர்களே நாளைய சமூகத்தின் தலைவர்கள் என நெல்சன் மண்டேலா கூறியதற்கு இணங்க, அவ்வழியில் பயணித்து வெற்றி காண வேண்டியது இளைஞர்களின் முன்பிருக்கும் சவாலாகும். அதனை வெற்றி கொள்வது அவசியம்.

தமிழ்Mirror க்கு எழுதுங்கள்
www.tamilmirror.lk


தமிழ்மிரர் வாசகர்களுக்கு வணக்கம். எமது பத்திரிகைக்கு உங்களுடைய ஆக்கங்கள், விமர்சனங்களை அனுப்பிவைக்கலாம். கருதுகளையும் வரவேற்கின்றோம்.

அத்துடன் உங்கள் பிரதேசங்களில் இடம்பெறும் விளையாட்டு, கலை, கலாசார நிகழ்வுகளை புகைப்படங்களுடன் அனுப்பிவைக்கலாம்.

பிரதேசத்தில் நிலவும் பிரச்சினைகள் தொடர்பிலும் எழுதலாம்.

அனுப்பவேண்டிய முகவரி
தமிழ்மிரர்
ஆசிரியர் பீடம்
No 8. Hunupitiya Cross Road, Colombo 2. P.O. Box 1136

Editorial: Tel: 011 2 479 372-8, Fax: 011 2 304 114
Marketing Manager (Dir.) 011 2 479 822, 077 3421 476
Circulation Manager (Dir.) 011 2 479 672, 077 3 219 775,
Subscription Manager (Dir.) 011 2 479 626, 011 2 479 628, 077 3 502 183
E-mail: tamilmirror@wijeya.lk






## வாழ்வியல் தரிசனம்

சிந்தனை ஓட்டங்கள் விஸ்தீரணம் அடையும்போது, அதனோடு இணைந்தவர்கள் பரோபகாரிகளாகி விடுகின்றனர். இது இயல்பான நிலைதான்.

நற்சிந்தனையுடன் தம்மைச் சுற்றியிருப்பவர்களின் நலன்பற்றி, அக்றை கொண்டால், அதுவே அவர்களின் பரந்த நற்பண்பை தானாகவே மாற்றிவிடுகின்றது.

வாவராலுமே சிறப்பான வாழ்வை உருவாக்க முடியும். ஆனால், நடைமுறை வாழ்வில் பலவித பிரச்சினைகளையும் சவால்களையும் எதிர்நோக்க வேண்டியுள்ளது. எவருமே துன்பங்களை விரும்புவதில்லை. எனினும், இன்பங்களும் துன்பங்களும் வந்தபோன வண்ணமே உள்ளன.

வாழ்க்கை என்பது அற்புதமான தேன்கூடு. பல்லாயிரம் தேனீக்கள், பலகோடி மலர்களில் இருந்து, தேனைச் சேகரிக்கின்றன. உழைப்பின் முழுவடிவத்தையும் இந்தச் செயற்பாடு உருவகிக்கின்றது. தேனீக்களின் இந்தத் தொண்டுக்கு, நிகர் பிறிதொன்றுமில்லை. இதேபோலவே, மனித இனம், தன்னை வளம்படுத்தப் போராடிக்கொண்டே இருக்கின்றது. இந்தப் போராட்டத்தை, ஆதரிக்க வேண்டியது நம்மவர்களின் தலையாய கடமையாகும். எனவே சிந்தனையாளர்கள் மனித இனத்தின் மீது அக்கறை செலுத்துவதும். அறிவுரை சொல்வதும் அவர்களது கடமையாகிவிட்டன. மக்களின் பிரதிநிதிகள் இவர்களாவர்.

–பருத்தியூர் பால. வயிரவநாதன்

# ஜனாதிபதித் தேர்தலில் - அரகலயவினது தாக்கம் இருக்கிறதா?

**லக்ஸ்மன்**

அரகலய போராட்டக்காரர்கள் இணைந்து உருவாக்கியுள்ள மக்கள் பேரவைக்கான இயக்கத்தின் ஜனாதிபதி வேட்பாளராக சட்டத்தரணி நுவான் பொபகே போட்டியிடுவார் என அறிவிப்பு வெளியானது. தேர்தலை எதிர்கொள்வதற்கான மூலோபாயங்கள் மக்கள் பேரவைக்கான இயக்கத்தின் நிலைப்பாடுகள் குறித்த அறிவிப்புகளும் வெளியாகியிருக்கின்றன.

ஜே.வி.பி உள்ளிட்ட ஒருசில பெரும்பான்மைக் கட்சிகள் அரகலயவின் பயனைப்பெற அல்லது அனுபவிக்க முயன்று கொண்டிருக்கையில் ஏன் இந்த அறிவிப்பு வெளியானது என்பதே இந்த இடத்தில் கேள்வியாகும்.

“கோட்டா கோ கம” எனத் தொடங்கிய அரகலயவுக்குப் பின்னர் இலங்கையில் ஏற்பட்ட அரசியல் மாற்றமானது சற்று வித்தியாசமானதே. ஆனால், அதே குட்டையில் ஊறிய மட்டைகளிடமே மீண்டும் ஆட்சி கையளிக்கப்பட்டதே அபத்தம். அரகலயவின் கோட்பாட்டை அனுசரித்தே தமது அரசியலைச் செய்தாகவேண்டிய கட்டாயம் அரசியல் கட்சிகள் உட்பட எல்லோருக்கும் ஏற்பட்டிருக்கிறது.

இருந்தாலும் அது நிகழ்ந்ததா என்பது கேள்வி. ரணில் விக்கிரமசிங்க ஜனாதிபதியாகப் பதவியேற்ற பின்னர் அந்த மாற்றத்திற்கு வாய்ப்பில்லை என்ற தோரணையில் அவர் உட்பட, சிலர் தம்முடைய அரசியலைச் செய்யமுனைந்து கொண்டிருக்கையில், அதற்கு எந்தப் பயனுமிருப்பதாகக் கொள்ளமுடியவில்லை. ஆனால் ஜனாதிபதியாக பதவியில் இருக்கும் ஒருவர் இம்முறை சுயேட்சையாகப் போட்டியிடவேண்டிய நிலை உருவாகியிருப்பதே அரகலயவின் பாதிப்பின் யதார்த்தமாகும். இதனை யாரும் மறந்துவிடக்கூடாது.

இவ்வாறிருக்கையில், ஸ்ரீலங்கா பொதுஜன பெரமுனையானது தமது கட்சியின் வெற்றிவாய்ப்பு குறித்து இன்னமும் அளவிட்டுக்கொள்ளாமல் இருப்பதானது அவர்களின் எதிர்கால அரசியல் கணிப்பீட்டிலுள்ள பிரச்சினையாகும். தமது கட்சியின் ஆட்சியையே தலைகீழாக மாற்றி பிரதர் பதவி விலகி, முக்கிய அமைச்சர்கள் பதவியை விட்டோடி, ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ச நாட்டைவிட்டுத் தப்பியோடி தனது பதவி விலகலை இணையத்தின் மூலம் சபாநாயகருக்கு அனுப்பும் நிலை ஏற்பட்டது. அவ்வாறிருந்தும் செப்ரம்பர் 21இல் நடைபெறவுள்ள ஜனாதிபதித் தேர்தலை மையப்படுத்தி தம்முடைய இருப்பை உறுதிப்படுத்த அக்கட்சி நகர்வுகளை முன்னெடுத்தது.

அதன் தொடர்ச்சியாகத்தான் நாமல் ராஜபக்சவை தம்முடைய ஜனாதிபதி வேட்பாளராக அறிவித்திருக்கிறது. திடுதிப்பென உருவான கட்சி மிகச் சடுதியாகவே அழிந்துபோனதைக் கண்முன்னே கண்டும் இவ்வாறானதொரு முடிவு எடுக்கப்பட்டு, சிங்கள மக்களால் ஆதரவளிக்கப்பட்டால் அது அரகலயவின் தோல்வியாகவே இருக்கும்.

இந்தநிலையில் 2022 அரகலயவின் போது இராணுவத்தின் உயர் அதிகாரிகள் சிலர் இராணுவ புரட்சிக்கான முயற்சிகளில் ஈடுபட்டனர். அரசியல் தலைவர்கள் அது மீண்டும் இடம்பெறுவதற்கு அனுமதிக்க கூடாது என்ற புதிய கதையொன்றை ஸ்ரீலங்கா பொதுஜன பெரமுனவின் பாராளுமன்ற உறுப்பினர் மதுர விதானகே கடந்த வாரம் தெரிவித்திருந்தார். இராணுவத் தலைவர்களாலும் பாதுகாப்பு தரப்பின் உயர்மட்டத்தினராலும் நாட்டின் தலைவரை பாதுகாக்க முடியவில்லை.

கோட்டாபய ராஜபக்சவின் தனிப்பட்ட இல்லத்திற்கு சவேந்திர சில்வா பாதுகாப்பை வழங்க மறுத்தார். சவேந்திரசில்வா, எங்கள் ஆட்களை பயன்படுத்தி ஆர்ப்பாட்டக்காரர்களை தாக்குமாறு கேட்டுக்கொண்டார். அரசியல் விடயங்களில் இராணுவம் தலையிட முடியாது என சவேந்திர சில்வா தெரிவித்தார் என்றும் கருத்துக்களை வெளியிட்டிருந்தார்.

அரகலய போராட்டத்தின்பின் நாட்டில் ஏற்பட்ட கையறு நிலையில் பாராளுமன்றத்தின் ஊடாக ஜனாதிபதியாக பதவிக்கு வந்த ரணிலுக்கு பெரும்பான்மை வாக்குகளுடன் மீண்டும் தான் பதவிக்கு வரவேண்டும் என்பது இப்போதைய அவா. அதற்கு பொதுஜன பெரமுன இடம் கொடுக்கவில்லை.

இறுதிவரையில் நம்பிய ரணிலுக்கு நாமலின் பெயர் அறிவிக்கப்பட்டது பெரும் ஏமாற்றமே. ஆனால் அரகலயவினால் ஜனாதிபதியானவருக்கு அரகலயவினால் விரட்டப்பட்டவர்களின் ஆதரவு கிடைக்காமல் போனது ஒருவகையில் நல்லதென்றே பேச்சுக்கள் வெளியவருகின்றன.

அடுத்த ஜனாதிபதியைத் தெரிவுசெய்யும் தேர்தலில் மும்முனைப் போட்டியே நிலவும் என ஏற்கனவே எதிர்வுகூறல்கள் வெளிவந்திருந்தாலும் இதுவரையில் 15பேர் கொண்ட பட்டியல் வரை அது நீண்டிருக்கிறது. சஜித் பிரேமதாச, அனுரகுமார திசாநாயக்க, விஜயதாச ராஜபக்ச, முன்னாள் இராணுவத் தளபதி பீல்ட் மார்சல் சரத் பொன்சேகா, தொழிலதிபர்களான திலிப் ஜயவீர, தம்மிக்க பெரேரா, பொதுப்பயன்பாடுகள் ஆணைக்குழுவின் முன்னாள் தலைவர் ஜனக ரத்நாயக்க, முன்னாள் அமைச்சர் ரொசான் ரணசிங்க, மிகிந்தலை ரஜமகா விகாரையின் தம்மரத்ன தேரர் என பட்டியல் நீண்டுகொண்டேயிருக்கிறது.

இனிமேல்தான் தேர்தல் சூடுபிடிக்கும். என்றாலும், பெரும்பான்மை மக்களின் வாக்குகள் பிரியும், சிதறும் என்று மாத்திரமே சொல்லமுடிகிறது. இந்தச் சிதறல்கள் வேட்பாளர் யாரும் பெரும்பான்மையைப் பெற்றுக்கொள்ளமுடியாத நிலையையே ஏற்படுத்தும். அதனால், இரண்டாம், மூன்றாம் விருப்புத் தெரிவு கட்டாயமாகும்.

‘கோட்டா கோ கம’ என்பது நாட்டின் பொது சட்டங்களை, விதிகளை பொருட்படுத்தாத இடமாக தமிழில் தேசிய கீதம், பாங்கோசைகள் ஒலிக்க, முள்ளிவாய்க்கால் நினைவேந்தல் நடத்தப்பட்டு, கிறிஸ்தவச் சடங்குகள், வெசாக் பண்டிகை என அனைத்துக்குமான இடமாக அமைந்திருந்தது.

அது ஒரு தனித்துவமான புதிய இயக்கமாக அரசியல் பொருளாதார எதிர்ப்பார்ப்புகளைப் பிரதிபலித்ததாக அமைந்திருந்தது. நாடு எந்தத் திசையில் செல்ல வேண்டும் என்பன பற்றிய சிந்னைகள் பேசப்பட்ட இடமாக அது இருந்தது. நாட்டின் அரசியல் தவறவிட்ட, அலட்சியப்படுத்திய விடயங்கள் பற்றியும் சிந்தித்திருந்தது.

தொழிற்சங்கவாதிகள், வைத்தியர்கள், சட்டத்தரணிகள், தொழில் வாண்மையாளர்கள், ஊடகவியலாளர்கள், தொழில்நுட்ப வல்லுனர்கள், எழுத்தாளர்கள், கலைஞர்கள், நடிகர்கள், ஓவியர்கள், அதிபர்கள், ஆசிரியர்கள், ஆண்கள் பெண்கள் என அனைவரும் ஒன்றிணைந்து நாட்டின் குறைபாடுகளைக் கண்டுபிடிக்க கூடிய கிராமமாக கோட்டா கோ கம விளங்கியது. அதே நேரத்தில், ஒடுக்கப்பட்ட, பாதிக்கப்பட்ட, புறக்கணிக்கப்பட்ட மக்களுக்காகவும், சிறுபான்மை மக்களிடம் புதையுண்டுபோன அரசியல் பொருளாதார குமுறல்களையும் வெளிப்படுத்தும் இடமாகவும் இருந்தது.

நாட்டின் அப்போது உருவாகியிருந்த நெருக்கடியான நிலையினால், கொழும்பில் சில இடங்களில் அமைதியாக ஆரம்பமான போராட்டம் பெரும் எடுப்பாக கோட்டா கோ கம என மாற்றம் பெற்றதற்கு அப்போதிருந்த சூழலே காரணமாக இருந்தது. மத்திய தர வகுப்பின், கட்சி சார்பற்றவர்களின் நாட்டின் அரசியல் பொருளியல் வீழ்ச்சியைப் பற்றிய தீவிரமான சிந்தனைகளுடன் உருவான அமைதிப் போராட்டமே அது.

ஜனாதிபதி செயலகம் முற்றுகையிடப்பட்டது. ‘போதும் வெளியேறுங்கள்’ என்ற கோஷம் ஜனாதிபதியின் செயலகத்தையே அதிர வைத்தது. இந்தப் போராட்டம் இலங்கை அரசியலின் புதிய மற்றும் தவிர்க்கப்பட முடியாத அத்தியாயமாக மாறியது. அதன் தாக்கங்களையே இப்போதும் நாம் தேசிய அரசியலில் காண்கிறோம். இருந்தாலும் அத்தாக்கம் குறைவானதே.

எது எவ்வாறானாலும், பெரும்பான்மையின மனோநிலையின் ஆதிக்கத் தனத்துடனேயே இம்முறை ஜனாதிபதித் தேர்தல் பிரச்சாரங்களும் முடிவும் அமையும் என்பதில் மாற்றம் ஏற்பட்டால் சரி. அதுவே அரகலயவினால் ஏற்பட்ட மாற்றம் என்று ஏற்றுக்கொண்டேயாகவேண்டும். ஆனால் இலங்கையின் பெரும்பான்மை தேசிய அரசியலின் தீர்மானமும் அதுவாகவே இருக்கவேண்டும். மாற்று நிலைப்பாடுகள் இருந்தாலும், பெரும்பான்மைக் கட்சிகளின் அல்லது பெரும்பான்மையின வேட்பாளர்களையே இலக்கு ஜனாதிபதித் தேர்தலில் வெற்றிபெறுவது ஒன்றே.

இலங்கையின் அரசியல், பொருளாதார, எதிர்கால மாற்றத்திற்காக உருவான அரகலயவினால் உருவான ஜனாதிபதி தன் அதிகாரத்தினைக் கொண்டு அப் போராட்டக்காரர்களையே அடக்கினார். கைதுகளை மேற்கொண்டார். அதன் பின்னர் இறுக்கமான சட்டங்களை உருவாக்கினார். இப்போதும் அதனையே தொடர்கிறார்.

இதற்குத்தானே ஆசைப்பட்டமாய் பாலகுமாரா என்பதுபோலல்லாமல் நாட்டின் எதிர்காலத்துக்கான முடிவாக இருப்பதே நல்லது. மாற்றுவது எவ்வாறு சாத்தியமாகப் போகிறது என்பதை யதார்த்தத்தின் கையில் விட்டுவைப்போம்.

## கடிதங்கள்

### ஆறு மணிக்கு பின்னர் சுடுதண்ணீர் இல்லை

யாழ். வடமராட்சி பருத்தித்துறை ஆதார வைத்தியசாலையின் உணவுச்சாலையில் ஆறு மணிக்கு பின்னர் நோயாளர்கள் சுடுதண்ணீரை பெற்றுக் கொள்ள முடியாத அவல நிலையிலுள்ளனர். குறிப்பாக குறித்த உணவுச்சாலையில் 6 மணியுடன் சுடு தண்ணீர் வழங்கல் நிறுத்தப்பட்டுகிறது. அவசரமாக சுடுதண்ணீர் தேவைப்பட்டால் ரூபா 100 தாருங்கள், மின்சார கேற்றிலில் சுடுநீர் வைத்து தருகின்றேன் என உணவுச்சாலை நடத்துனர்கள் கூறுவதாக நோயாளர்கள் தெரிவிக்கின்றனர். சுடுநீர் பெற செய்தவர்களுடன் உரையாடிய மருத்துவமனை உணவுச்சாலை முகாமையாளர் தம்மிடம் ரூபாய் 140,000 மாதாந்த குத்தகை பெறுவதால் தாம் அதிகம் பாதிக்கப்படுவதாகவும் குறிப்பிட்டுள்ளார்.

அதேவேளை குறித்த ஆதார வைத்தியசாலை உணவுச்சாலையில் நீரிழிவு நோயாளர்களுக்கு தேவையான எந்தவிதமான உணவு வகைகளையும் பெற்றுக்கொள்ள முடிதாமல் பெரிதும்சி ரமப்படுகின்றனர். நோயாளர்களுக்கு உகந்ததல்லாத உணவுப் பொருட்கள் மட்டுமே விற்பனையாகின்றன. குறிப்பாக சிற்றுண்டிகளாக மஸ்கற், பூந்தி லட்டு போன்றனவே அதிகளவில் விற்பனையாகின்றன.

மருத்துவமனையில் பணியாற்றுபவர்கள், விடுதியில் தங்கியுள்ளவர்கள் உட்பட அனைவரும் மருத்துவமனைக்கு வெளியேசென்று பாதுகாப்பான குடிநீரை பெற்றுக்கொள்கின்றனர்.

எனவே அதிகாரிகள் உடனடியாக நடவடிக்கை மேற்கொள்ள வேண்டுமென நோயாளிகள் தெரிவிக்கின்றனர்.

– பு.கஜிந்தன்



# சுயநலம் மிக்க மனிதர்கள்

ல.மயூரன்
BA.MA.Mphil[R]

காலநிலை என்பது குறிப்பிட்ட பகுதியில் நீண்ட காலப்பகுதியில் அல்லது பல தசாப்தங்கள் அல்லது பல நூற்றாண்டுகளாக காணப்படும் நீண்ட கால சராசரி வானிலை தன்மையைக்குறிக்கிறது. வெப்பநிலை, ஈரப்பதம், மழைப்பொழிவு, காற்று மற்றும் வளிமண்டல நிலைமைகள் போன்ற பல்வேறு கூறுகளை உள்ளடக்கிய விடயமாக காணப்படும் வானிலைத்தரவுகள் பல ஆண்டுகளாக சேகரிக்கப்பட்டு காலநிலை தகவல் பெற்றுக்கொள்ளப்படும். இவ்வானிலை செயற்பாடு புவிக்கோளத்தின் சிறப்பு அம்சமாக காணப்படுவதுடன், உயிர்கோளத்தின் இயக்கத்திற்கும் துணைபுரிகின்றது.

இக்காலநிலை, வானிலை செயற்பாடுகள் உயிர் கோளத்தின் நிலைத்திருப்பிற்கும், உருவாக்கத்திற்கும் காரணமாக அமைவதுடன் அவற்றின் பரிணாம வளர்ச்சிநிலைக்கும், அழிவிற்கும் துணைபுரிகின்றது. இப்புவியில் இயற்கையான முறையில் பல்வேறு காலங்களில் அழிவுகள் இடம்பெற்றாலும். அவை பல உயிரினங்களை அழித்தும் புதிய உயிரினங்களை உருவாக்கியும் உள்ளது. இயற்கையின் சமநிலையைப் பேணும் வகையில் பெரும்பாலான உயிரினங்களின் செயற்பாடு காணப்பட்டாலும் மனிதன் எனும் உயிரினத்தின் செயற்பாடுகள் அவ்வியற்கையின் செயற்பாட்டிற்கு முரண்பாடுடையதாகக் காணப்படுகின்றது. அதன் பெறுமதிமிக்க விளைவுகளை இன்றைய சமூகமும், எதிர்கால சமூகமும் எதிர்கொள்ள வேண்டும் என்பது கட்டாயமாக்கப்பட்டுள்ளது.

மனித நடத்தையினால் ஏற்பட்டுள்ள மாற்றம் இப்புவியில் உள்ள அனைத்து உயிரினங்களும் அனுபவிக்க வேண்டியுள்ளது என்பது கவலைக்குரிய விடயமாக அமைவதுடன், மறுதலிக்க முடியாத விடயமாகவும் அமைகின்றது. வாழ்வாதாரத்திற்கான அனைத்து வளங்களையும் இப்புவியிலே பெற்றுக்கொள்ளும் மனித இனம் தன்னுடைய கண்மூடித்தனமான செயற்பாட்டினால் புவியின் பௌதீக அம்சங்களின் செயற்பாட்டிலும் தாக்கத்தைச் செலுத்தியுள்ளனர். குறிப்பாகக் காலநிலைக் கூறுகளில் ஏற்பட்டுள்ள மாற்றம் பல்வேறு கோணங்களில் பாதிப்பை ஏற்படுத்தினாலும். மனிதர்களின் உணவுத் தேவையை பூர்த்தி செய்வதில் அதிக தாக்கத்தை ஏற்படுத்தவுள்ளது. இதனால் பொருளாதார இழப்புகளையும், வறுமை நிலையையும் சந்திக்க வேண்டிய நிலையைப் பல நாடுகள் எதிர்கொள்ளப் போகின்றன. மனிதனின் உணவு உற்பத்தி மேற்கொள்ளப்படும் முதலாம் நிலை பொருளாதார செயற்பாடுகளான விவசாயம், விலங்கு வளர்ப்பு மற்றும் மீன்பிடி செயற்பாடுகள் காலநிலைக் காரணிகளினால் கட்டுப்படுத்தப்படுவதுடன், உணவு உற்பத்தியின் வினைத்திறன் மிக்க அறுவடைகளின் அளவும் கட்டுப்படுத்தப்படும். இவ்வாறு காலநிலைக் காரணிகள் முதலாம் நிலைப்பொருளாதார நடத்தையை எவ்வாறு கட்டுப்படுத்துகின்றன என்பதை ஆராய்வதாக இக்கட்டுரை அமைகின்றது.

## காலநிலை மாற்றம்

புவிக்குரிய மனிதன் புவி தனக்குரியது என கருதிக்கொண்டு கட்டுப்பாடற்ற வளச் சுரண்டலையும், கண்ணியமற்ற இனப்பெருக்கத்தையும் மேற்கொண்டு வருகின்றான். இதன் விளைவினால் இப்புவி வாழ்வாதாரம் சிதைவடைந்து வருவதுடன், உயிரினங்கள் வாழ்வதற்கு அச்சுறுத்தல் மிக்க பிரதேசமாகவும் மாற்றப்பட்டுள்ளது. மனித செயற்பாடு தன்னை மட்டுமன்றி ஏனைய உயிரினங்களையும் பாதிப்புக்காக்கியுள்ளது.

உலகில் அழிந்து வரும் அல்லது அருகிவரும் உயிரினங்களைப் பதிவு செய்கின்ற செந்தரவு புத்தகத்தில் தன்னையும் இணைத்துக்கொள்ள வேண்டிய காலத்தை இந்த மனிதகுலம் ஏற்படுத்திக்கொண்டு இருக்கின்றது. உலகில் வாழ்கின்ற உயிரினப் பரம்பலில் மனிதகுலம் என்பது மிகவும் சுமையான உயிரினம் என்ற வகைப்பாட்டினுள் உள்ளடக்கப்பட வேண்டிய கட்டாயத்திற்குத் தள்ளப்படும். இன்னும் சில தசாப்தங்களில் மக்கள் தொகையானது உலக அளவில் அதிகரித்து புவியின் தாங்கு சக்திக்கு அப்பாற் பட்ட எல்லையைத் தாண்டி விடும். அதேசமயம் தமக்குத் தேவையான உணவு உற்பத்தியைக் கூட மேற்கொள்ள முடியாத நிலைக்கு மனிதகுலம் தள்ளப்படும்.

மக்கள்தொகையின் அதிகரிப்பிற்கு ஏற்ப உணவுகளுக்கான உற்பத்தியை அதிகரித்துக் கொள்வதற்கும் உணவுகளுக்கான தேவையைப் பூர்த்தி செய்வதற்குமான தேவை அதிகரித்துக் கொண்டு செல்லும் இத்தருணத்தில். இந்தப் பூமி எதிர்கொள்ளப்போகும் மற்றுமொரு சவாலாகக் காலநிலை மாற்றமும் அதனால் ஏற்படும் பாதிப்புகளுமாகும். எதிர் காலத்தில் மனிதகுலம் தாம் வாழ்வதற்கான குடியிருப்புகளை அமைத்துக்கொள்வதற்கான சூழலை உருவாக்கிக்கொண்டாலும் தமக்குத் தேவையான உணவுற்பத்தி செய்யப்படுவதற்கான நிலப்பரப்பைப் பெற்றுக்கொள்வது என்பது மிகப்பெரிய சவால் மிக்க விடயமாகக் காணப்படும். குறிப்பாகத் தரிசற்ற நிலப் பரம்பலையும், நஞ்சற்ற உணவைப் பெற்றுக்கொள்வதுவும் சவால் நிறைந்த விடயமாகக் காணப்படும்.

1950களில் 2.4 பில்லியன்களாக காணப்பட்ட மக்கள் தொகையானது 2023இல் காலப்பகுதியில் 8 பில்லியன்களாக அதிகரித்துவிட்டது. 19ஆம் நூற்றாண்டு காலப்பகுதியில் காணப்பட்ட மக்கள் தொகையிலும் பார்க்க தற்போதைய மக்கள் தொகையானது மிக அதிகமாகவே காணப்படுகின்றது. தேமஸ் மால்தூஸ் கருத்தின்படி (1798) பெருக்கல் ஏற்றமாக மக்கள்தொகை பெருகிக்கொண்டு வருகின்றது. அதேசமயம், உணவு உற்பத்தி எண் கணிப்பு (கூட்டல்) வேகத்தில் வளர்ச்சியடைகின்றது. ஆனால் 16ஆம் நூற்றாண்டினை அடுத்து வந்த காலப்பகுதியில் சனத்தொகை வளர்ச்சிக்கு ஏற்ப உணவுத் தேவையை அதிகரிக்க வேண்டி இருந்த காரணத்தினால் கைத்தொழில் புரட்சியும் அதனைச் சார்பாகக் கொண்டு பசுமைப்புரட்சியும் வளர்ச்சி பெற்றது. அவற்றின் ஊடாக அக்கால மக்களுக்கான உணவுக்கான தட்டுப்பாட்டினை குறைத்துக் கொள்ளுவதற்கான முயற்சிகள் பல இடம்பெற்றன. அதில் பல நாடுகள் வெற்றியும் பெற்றன. இதன் போது உலகின் சில பகுதிகள் அதிகமான உணவினை நுகர்ந்து கொள்ள அதிகளவான உணவினை உற்பத்தி செய்து கொண்டன அதன் காரணத்தினால் சூழலியல் வாதமும் மானுட வாதமும் முரண்படத் தொடங்கியது.

கைத்தொழில், விவசாயத்தை வளர்ச்சியடையச் செய்வதற்கு மனிதகுலம் மேற்கொண்ட நடவடிக்கைகளால் இவ்வுலகில் காணப்பட்ட இயற்கை அம்சங்கள் பல இழப்புக்களைச் சந்திக்க வேண்டியிருந்தது. குறிப்பாக வளிமண்டலம் தூய்மையையும், நீர் மாசற்ற தன்மையையும், நிலம் வளத்தையும் இழந்தன . இதனால் பல ஆபத்துக்களைச் சந்திக்க வேண்டியவர்களாக தற்போதைய உலக மக்கள் காணப்படுகின்றனர். மனிதகுலம் அன்று மேற்கொண்ட செயற்பாடுகளின் விளைவுகளை அறுவடை செய்யவேண்டியவர்களாக இன்றைய தலைமுறையினரும், எதிர்காலத்தில் கருவுற்றுப் பிறக்கவிருக்கும் அனைத்து உயிரினங்களும் காணப்படுகின்றனர். இயற்கையின் செயற்பாட்டைச் சீர்குலைத்த மனிதன் தண்டனைகளை தான்மட்டும் அனுபவிக்காது அனைத்து உயிரினங்களும் அதற்கான விளைவுகளை அனுபவிக்கின்றன என்பதைச் சிந்திக்கவேண்டும். தனது தேவையினை பூர்த்தி செய்து கொள்வதற்காக மேற்கொண்ட நடத்தைகள் இவ்வுலகை வெப்ப மயமான தீவாக மாற்றியுள்ளது. இதன் காரணமாக வெப்பநிலை அதிகரிப்பது நாளாந்த நிகழ்வாக மாறியுள்ளது 1950-2020ஆம் ஆண்டுக்கான இடைப்பட்ட காலப்பகுதியில் 0.5°C வெப்பநிலை உலக அளவில் சராசரியாக அதிகரித்துள்ளது என IPPC இன் அறிக்கை கூறுகின்றது இவ்வெப்பநிலை மாற்றம் நேரடியாகப் பல மாற்றங்களை ஏற்படுத்தினாலும் மனித செயற்பாட்டில் பல்வேறு மாற்றங்களை ஏற்படுத்துகின்றது.

## பொருளாதாரத்திற்கும் காலநிலைக்கும் உள்ள தொடர்பு

பொருளாதார நிலை என்பது தனிமனித வாழ்க்கை தொடக்கம், சமூகம், மற்றும் நாடு சார்ந்து காணப்படும். இப்பொருளாதாரத்தை மனித நாகரிகம் தனக்கென வகுத்துக்கொண்ட வணிக முறைமை எனலாம். இவ்வணிக முறைமை நாகரிகம் என்ற போர்வையை அதிகமாகச் சூடிக்கொண்டுள்ளது . இப்புவியில் தன்னை சிறந்த உயிரினமாகவும், இப்புவி தனக்கு மட்டுமே உரியது என்பதைப் பறைசாற்றுவதற்கு. மனித நாகரிகம் வகுத்துக்கொண்ட வகைப்பாடுதான் பொருளாதாரம். இயற்கையின் வளங்களைச் சுரண்டிக்கொண்டு அவற்றை விற்றும்,வாங்கியும் கொள்கின்ற மனிதர்கள் அவற்றின் ஊடாக சுயநல பொருளாதார நிலையை உயர்த்திக்கொண்டனர். இயற்கையின் செயல்களையும் அவற்றின் மௌனங்களையும் சாதகமாக்கிக் கொண்ட மனிதர்கள் தங்களின் வளர்ச்சிப் பாதைக்கு அவற்றைப் பயன்படுத்தத் தொடங்கினர். மனிதர்கள் சுயநலம் மிக்கவர்களாகக் காணப்பட்டதால் சுயநலம் அற்ற இப்புவியின் சடப்பொருள் செயற்பாட்டைக் கண்டு கொள்ளாத நிலை காணப்படுகின்றது. இதுவே இயற்கை அழிவின் அடையாளமாகவும் காணப்படுகின்றது.

தனக்குத் தேவையான உணவு முதல் வாழ்கின்ற குடியிருப்பு வரை இவ்வியற்கை வழங்கியுள்ளது என்பதை நினைவில் கொள்ளாத மனிதர்கள் தம்முடைய உற்பத்திகளை இயற்கைக்கு முரணானதாக உற்பத்தி செய்துள்ளனர். இயற்கையின் ஒவ்வொரு செயற்பாடும் அல்லது ஒவ்வொரு பொருளும் இயற்கைக்கு ஒவ்வாமை தன்மையை ஏற்படுத்துவது இல்லை என்பதை அறிந்து கொண்ட மனிதர்கள். தாம் உற்பத்தி செய்யும் பொருட்களில் அதனை உறுதிப்படுத்திக் கொள்ளத் தவறிவிட்டார்கள். மனிதனின் உற்பத்தி, கண்டுபிடிப்புக்கள் இயற்கைக்கு முரணானதாகக் காணப்படுவதுடன் இயற்கையில் அழிவடையாது நீண்டகாலம் நீடித்து நிலைத்திருக்கும் பொருட்களாகவும் கணப்படுகின்றது. அவை புவியில் குப்பைகாளாகவும் வெப்பத்தை உறிஞ்சிக்கொள்ளும் பொருட்களாகவும், வளிமண்டலத்தில் தூசுக்களாகவும் காணப்படுகின்றது இதன் காரணமாக அவை இயற்கையுடன் முரண்படுகின்றன.

இயற்கையால் வெளிப் படுத்தப்படும் அனைத்து நன்மைகளும் மனிதனின் உற்பத்தி அல்லது கண்டுபிடிப்புகளினால் உருவாக்கப்படும் திண்ம,திரவ மற்றும் வாயுநிலைப் பொருட்களினால் அழிவை அல்லது மாற்றத்தை சந்திக்கின்றது. இவ்வாறான அழிவுகள் அல்லது மாற்றங்கள் மனிதனின் செயற்பாடுகள் அனைத்தையும் பாதிப்படையும் நிலைக்கு தள்ளிவிடும். குறிப்பாக உணவுற்பத்தி செயற்பாடுகளான விவசாயம், கால்நடைவளர்ப்பு, மீன்பிடி நடவடிக்கைகளில் அதிகமான பாதிப்பை ஏற்படுத்தும்;. அதன் அடிப்படையில் விவசாய நடத்தைகள் எவ்வாறான பாதிப்புகளை எதிர் கொள்ளப் போகின்றன என்பதை இக்கட்டுரையூடாக அறிந்து கொள்வோம்.

(செவ்வாய்க்கிழமை தொடரும்...)

# Fresenius Medical Care Lanka உடன் பவர் கைகோர்ப்பு

ஏ. பவர் அன்ட் கம்பனி லிமிடெட், ஜேர்மன் நாட்டு பல்தேசிய மருத்துவ சாதனங்கள் நிறுவனத்தின் இலங்கைப் பிரிவான Fresenius Medical Care Lanka (Private) Limited உடன் பங்காண்மை உடன்படிக்கையில் கைச்சாத்திட்டிருந்தது.

இலங்கையின் மாபெரும் மற்றும் சர்வதேச ரீதியில் புகழ்பெற்ற மருந்துப் பொருட்கள் வர்த்தக நாமங்களை ஒழுக்கமான ரீதியிலும், நம்பிக்கையை வென்ற வகையிலும் பிரதிநிதித்துவப்படுத்துவதாக அறியப்படும் பவர், Fresenius Medical Care Lanka தயாரிப்புகளை விநியோகிக்கும் செயற்பாடுகளை, தனது பரந்த வலையமைப்பு மற்றும் நவீன டிஜிட்டல் கட்டமைப்பு மற்றும் தாக்கத்தை ஏற்படுத்தும் வியாபார மாதிரிகளினூடாக தொடர்ந்தும் முன்னெடுக்க பங்களிப்பை வழங்கும்.

இந்த மூலோபாய பங்காண்மையானது, பகிரப்பட்ட பெறுமதிகள் மற்றும் உறுதியளிக்கும் இணைவுகள் போன்றவற்றினூடாக வலுவூட்டப்பட்டு, நோயாளர்களுக்கு மேம்படுத்திய பெறுமதியை பெற்றுக் கொடுக்கும். இலங்கையில் சிறுநீரக அழற்சி நோய் பெருமளவில் காணப்படும் நிலையில், டயல்சிஸ் தீர்வுகளை அணுகுவது முக்கியமானதாகும். புகழ்பெற்ற முன்னோடிகளான பவர் மற்றும் Fresenius Medical Care Lanka ஆகியவற்றுக்கிடையிலான





இந்த கைகோர்ப்பினூடாக, இந்த சுகாதார பராமரிப்பு தேவையை வினைத்திறனான வகையில் நிவர்த்தி செய்யக்கூடியதாக இருக்கும்.

Fresenius Medical Care என்பது, சிறுநீரக குறைபாட்டைக் கொண்ட நபர்களுக்கு அவசியமான தயாரிப்புகள் மற்றும் சேவைகளை பெற்றுக் கொடுக்கும் உலகின் முன்னணி சேவை வழங்குநராகும். உலகளாவிய ரீதியில் 4.1 மில்லியன் நோயாளர்கள் அடிக்கடி டயல்சிஸ் சிகிச்சைக்கு உட்படுத்தப்படுகின்றனர். டயல்சிஸ் இயந்திரங்கள் மற்றும் டயலைசர்கள் போன்ற தயாரிப்புகளை பெற்றுக் கொடுப்பதிலும் முன்னோடியாக அமைந்துள்ளது. அதன் பிரதான வியாபாரத்துடன், Renal Care Continuum ஊடாக, பாரதூரமான பராமரிப்பு சேவைகளை பெற்றுக் கொடுப்பதை விஸ்தரிக்கும் நடவடிக்கைகளையும் மேற்கொண்ட வண்ணமுள்ளது.

1945ஆம் ஆண்டு பவர் சுகாதார பராமரிப்பு துறையில் காலடி பதித்திருந்த நிலையில், சத்திரசிகிச்சை, இனங்காணல் மற்றும் மருத்துவ போஷணை தயாரிப்புகள் போன்றவற்றுக்கு அதிகளவு நாடப்படும் பிரிவாக வளர்ச்சியடைந்துள்ளதுடன், தங்கியிருக்கும் திறன், புத்தாக்கம், நம்பிக்கை மற்றும் தரம் ஆகியவற்றில் ஒப்பற்ற பதிவுகளையும் கொண்டுள்ளது. பவருடன் Fresenius Medical Care Lanka வின் பங்காண்மை இதற்கு மற்றுமொரு எடுத்துக்காட்டாகும்.

இலங்கையில் பவர் பிரதிநிதித்துவப்படுத்தும் உலகத்தரம் வாய்ந்த சுகாதாரப் பராமரிப்பு வர்த்தக நாமங்களில் சிலவாக Novartis, Roche, Sanofi, GSK, Sandoz, Nestl, Health Science, Merck, Merck Sharp and Dohme, J&J (Specialty Care), Takeda (Vaccines), Mega Life Sciences, Vitrolife, Viatris, Isispharma, Unichem, Apex, Alcon, Inova, Eisai, Rohto, Dexa Medica, மற்றும் Ajanta Pharma ஆகியன அமைந்துள்ளன.

# PLC நிறுவனத்துக்கு காபன் நடுநிலை சான்றிதழ்

காலநிலை மாற்றத்தை கட்டுப்படுத்துவதிலும், அதற்கு எதிராக போராடுவதிலும் பங்களிப்பு வழங்கும் வகையில், Aberdeen Holdings (Pvt) Ltdஇன் துணை நிறுவனமான Ex-Pack Corrugated Cartons PLCக்கு, தேசிய தூய உற்பத்தி நிலையத்திடமிருந்து (NCPC) தொடர்ச்சியான மூன்றாவது வருடமாகவும் காபன் நடுநிலை சான்றிதழ் வழங்கப்பட்டுள்ளது. அதனூடாக, நிலைபேறாண்மையை முன்னெடுத்துச் செல்வதில் காண்பிக்கும் தொடர்ச்சியான அர்ப்பணிப்பை மீள உறுதி செய்துள்ளது.

தாம் இயங்கும் தொழிற்றுறையில், காபன் நடுநிலையை எய்துவது என்பது சவால்கள் நிறைந்த விடயமாகும். இந்த சான்றளிப்பில் Ex-Pack நியமத்தை ஏற்படுத்தியுள்ளதுடன், ஏனையவர்களுக்கும் பின்தொடர முன்மாதிரியானதாக அமைந்துள்ளது. சிறந்த தொழிற்துறை செயன்முறைகளை பின்பற்றுவதில் Expackஇன் தொடர்ச்சியான முயற்சிகளினூடாக, காபன் வெளியீடு குறைந்துள்ளதுடன், முழு செயற்பாடுகளையும் உள்வாங்கி வருடாந்த பச்சைஇல்ல வாயு (GHG) இலக்குகளை எய்துவதற்கு வழிகோலியுள்ளது.

Ex-Pack இன் வலு மற்றும் நீர் நுகர்வு, கழிவு முகாமைத்துவம், போக்குவரத்து மற்றும் இதர தொடர்புடைய நுகர்களின் அடிப்படையில் GHG மதிப்பாய்வை NCPC மேற்கொண்டிருந்தது. MEP வடிவமைப்பு, காபன் நடுநிலை ஆலோசனை மற்றும் பசுமை கட்டிட சான்றளிப்பு சேவைகளை வழங்கும் முன்னணி சேவை வழங்குநரான Co-energi, வருடாந்தம் சான்றை பெற்றுக்கொள்வதற்கு Ex-Pack க்கு முக்கியத்துவம் வாய்ந்த தொழில்நுட்ப ஆலோசனைகளை வழங்கியிருந்தது.



தவிசாளர் சத்தார் கசீம் கருத்துத் தெரிவிக்கையில், “மூன்றாவது வருடமாகவும் காபன் நடுநிலை வாய்ந்த நிறுவனமாக கௌரவிக்கப்பட்டுள்ளமை எமக்கு மிகவும் திருப்தியளிக்கின்றது. குறிப்பாக, எமது நிறுவனம் தொழிற்துறையமாக்கலுக்குட்பட்டது. நாம் எப்போதும், சூழலுக்கும், சமூகத்துக்கும் ஏற்படும் தாக்கத்தை தணித்துக் கொள்வதில் கவனம் செலுத்துகின்றோம். தற்போது, net-zero காபன் இலக்கை எய்துவதற்கு, எமது ESG அரண்களை மேம்படுத்துவதற்கான மேலதிக படிமுறைகளை மேற்கொள்கின்றோம். எனவே, இந்த கௌரவிப்பு என்பது நீண்ட காலமாக கிடைக்க வேண்டியதாக அமைந்துள்ளது. இந்த விடயம் தொடர்பான நிபுணர்களின் கலந்தாலோசனைக்கமைய, காபன் வெளியீடுகளை தணிப்பதற்கும், சமநிலைப்படுத்துவதற்கும் தொழிற்துறையின் சிறந்த நிலைபேறான செயன்முறைகளை Ex-Pack தொடர்ச்சியாக பின்பற்றுகின்றது.” என்றார்.

# அமானா டகா:.புல் இன்சூரன்ஸுக்கு விருது

அமானா டகாஃபுல் இன்சூரன்ஸ், “இலங்கையின் ஆண்டின் சிறந்த மொபைல் App” விருதை இன்சூரன்ஸ் ஏசியா விருதுகள் 2024இல் சுவீகரித்திருந்தது. வாடிக்கையாளர் அனுபவங்களை மேம்படுத்துவதற்கு நவீன தொழில்நுட்பத்தை பயன்படுத்துவதற்கான நிறுவனத்தின் அர்ப்பணிப்பை வெளிப்படுத்துவதாக இந்த கௌரவிப்பு அமைந்துள்ளது.

இந்த விருதுகள் வழங்கும் நிகழ்வு அண்மையில் சிங்கப்பூர் மரீனா பே சான்ட்ஸ் இல் நடைபெற்றது. பிராந்தியத்தின் சிறந்த காப்புறுதி நிறுவனங்களின் புத்தாக்கமான பங்களிப்புகள் மற்றும் தொழிற்துறையில் கொண்டிருக்கும் தலைமைத்துவ சாதனைகளை கொண்டாடியிருந்தது.

அமானா டகாஃபுல் நிறுவனத்தின் டிஜிட்டல் மாற்றியமைப்பு மூலோபாயத்தின் அங்கமாக அறிமுகம் செய்யப்பட்ட மோட்டார் காப்புறுதி app கௌரவிக்கப்பட்டிருந்தது. பாவனையாளர்களுக்கு ஒப்பற்ற, பாவனையாளரை மையப்படுத்திய அனுபவத்தை பெற்றுக் கொடுப்பதில் நிறுவனம் காண்பிக்கும் அர்ப்பணிப்பு இந்த app இனூடாக பிரதிபலிக்கப்பட்டுள்ளதுடன், காப்புறுதித் துறையில் அதன் தலைமைத்துவம் மேலும் உறுதி செய்யப்பட்டுள்ளது.

அமானா டகாஃபுல் ஜெனரல் பிரதம நிறைவேற்று அதிகாரி சிவா கார்த்திகன் கருத்துத் தெரிவிக்கையில், “எமது மொபைல் appக்கு இந்த விருதைப் பெற்றுக் கொண்டுள்ளதையிட்டு நாம் மிகவும் பெருமை கொள்கின்றோம். எமது வாடிக்கையாளர்களின் அனுபவங்களை மேம்படுத்தும் சௌகரியமான மற்றும் புத்தாக்கமான தீர்வுகளை பெற்றுக் கொடுப்பதற்கான எமது அர்ப்பணிப்பை இந்த கௌரவிப்பு மேலும் உறுதி செய்துள்ளது. இந்த சாதனை எமக்கும் இலங்கைக்கும் மிகவும் முக்கியத்துவம் வாய்ந்ததாக அமைந்துள்ளது, எமது பாவனையாளர்களின் தேவைகளை நிறைவேற்றுவதற்கு எமது டிஜிட்டல் கட்டமைப்புகளை தொடர்ந்தும் மேம்படுத்த முன்வந்துள்ளோம்” என்றார்.

appஇன் மேம்படுத்தப்பட்ட உரிமைகோரல்கள் கையாளல் கட்டமைப்பு என்பது விசேடத்துவமான உள்ளம்சமாகும். பாவனையாளர்களுக்கு appஇனூடாக முழு காப்புறுதி உரிமைகோரல் செயற்பாடுகளையும் மேற்கொள்வதற்கு வசதியளிக்கின்றது. செயற்படுத்தல் மற்றும் படிவங்களை பூர்த்தி செய்து அவற்றின் படங்களை அப்லோட் செய்வது மற்றும் அத்தியாவசிய ஆவணங்களை நிர்வகிப்பது போன்ற சகல செயற்பாடுகளையும் பாவனையாளர்கள் இலகுவாக மேற்கொள்ள முடிவதுடன், தமது உரிமைகோரலின் நிலையை கண்காணித்து, அதனை மீளாய்வு செய்து கொள்ளவும் முடியும்.



## கும்பாபிஷேக விழா



கேகாலை பிரதேச ருவன்வெல்ல, வாரக்க, சனிகிரோப்ட் தோட்ட ஸ்ரீ முத்துமாரியம்மன் ஆலய பிராயச்சித்த பாலாலய கும்பாபிஷேக விழா சனிக்கிழமை (10) நடைபெற்றது. அறங்காவலர் அழகப்பன் யோகநாதன் தலைமையில் நடைபெற்ற கும்பாபிஷேக விழாவில் 'ஜோதிட ஞான பானு' வைத்தியர் சிவஸ்ரீ சிவநேசன் சிவாச்சாரியார் தத்புருஷ சிவாச்சாரியார் சிவஸ்ரீ ரவிச்சந்திர குருக்கள் கும்பாபிஷேக குருமணி சிவஸ்ரீ கிருஸ்ணா குருக்கள், சர்வசாதகம் சிவஸ்ரீ தர்ஷன் குருக்கள் உள்ளிட்டோர் கலந்து கொண்டனர்.








## தீர்த்தோற்சவம்

















கொழும்பு – வெள்ளவத்தை மயூரபதி ஸ்ரீ பத்திரகாளி அம்மன் கோயில் 37ஆவது ஆண்டு பஞ்சரத ஊர்வல பெருவிழா சனிக்கிழமை (10) இடம்பெற்றது.
இதனைத் தொடர்ந்து, ஞாயிற்றுக்கிழமை(11) பக்தர்கள் புடைசூழ பால்குட பவனியுடன் தீர்த்தோற்சவம் இனிதே நிறைவடைந்தது.
(படங்கள்: செல்லதுரை கிருஷ்ணகுமார்)



## கோமாதா பூஜை



காரைதீவு - ஸ்ரீ சித்தானைக்குட்டி சுவாமியின் 73ஆவது குரு பூசை நிகழ்வையொட்டி, பால்குட பவனி, திருவிளக்கு, கோமாதா பூஜைகள் ஞாயிற்றுக்கிழமை (11) இடம்பெற்றன.
(படங்கள்: வி.ரி.சகாதேவராஜா)













## வருடாந்த பெருவிழா



ஹட்டன் - குரூஷ் தேவாலயத்தின் 11ஆவது வருடாந்த பெருவிழா ஞாயிற்றுக்கிழமை (11) நடைபெற்றது.





## இன்றைய சமூகத்தில்
# கல்வியின் எதிர்பார்ப்பு



குமாரசிங்கம் தனுஷா,
2ஆம் வருட கல்வியியல் சிறப்பு
கற்கை மாணவி,
கல்வி–பிள்ளைநலத்துறை
கிழக்குபல்கலைகழகம்.

சமூகம் எப்போதெல்லாம் புதுமைகளைக் காண்கின்றதோ அப்போதெல்லாம் கல்வி எனும் அடித்தளம் வலுப்பெற்றிருக்கும். கல்வியானது சமூகத்தில் பல மாற்றங்களை ஏற்படுத்துகிறது. கல்வி தனி நபரின் வாழ்க்கையில் ஆரம்பித்து சமூகத்தின் வளர்ச்சிவரை தாக்கத்தை ஏற்படுத்துகிறது.

சமூகத்தின் அனைத்து விடயங்களில் கல்வி மிக முக்கிய பங்கு வகிக்கிறது. எனவே, தரமான கல்வியின் தாக்கம் சமூகத்தின் வளர்ச்சியில் காணலாம்.

இன்றைய சமூகமானது குறிப்பாக நாகரிகத்தின் வளர்ச்சிக்கும் நவீனத்துவதற்கும் கல்வியினை பெரிதும் சார்ந்திருக்கின்றது. புழைமையான சமூகங்களிலிருந்து இன்று மனிதகுலம் வெகு தூரம் சென்று விட்டது. கல்வியறிவு இல்லாத சமூகம் இன்னும் அடிமைத்தனத்திற்கும் கட்டுப்பாடுகளுக்கும் உட்பட்டே காணப்படுகிறது.

எனவே, இதனைத் தகர்த்தெறியும் வழியாக இன்றைய சமூகம் கல்வியினை பெரிதும் எதிர்பார்க்கின்றது. சிறந்த கல்வியானது சமூகத்தின் உள்ள தேவைகளைப் பெற்றுக்கொடுப்பதாகவே உள்ளது. கல்வியறிவு உலகத்தைப் புரிந்து சிறந்த முன்னோக்குகளை உருவாக்குவதற்கும் வெற்றியடைவதற்கும் இன்றைய கல்வியில் கட்டமைக்கப்படவேண்டும் என்று வலியுறுத்துகின்றது.

பல குடும்பங்கள் மற்றும் சமூகங்கள் தலைமுறைகளாக வறுமையில் வாழ்வதற்கு முக்கிய காரணம் கல்வி அறிவு இன்மையே ஆகும். சமூகத்தின் நிலைகளைப் புரிந்து கொண்டு கிடைக்கும் வாய்ப்புக்களை அடையாளக் காணக்கூடியதற்கான கல்வியே விரும்பப்படுகின்றது. புதிய அறிவு மற்றும் திறன்களைப் பெறுவதற்கும் சிறந்த வேலை பெற்று தரும் கல்வி முக்கியம் பெறுகின்றது.

மேலும், இது முழு சமூகத்தின் முன்னேற்றத்திற்கு நேரடியாகத் தாக்கம் செலுத்துகின்றது. ஏழைப் பின்னணியில் உள்ள சமூகத்தின் முன்னேற்றத்திற்கும் வெற்றிக்கும் கல்வி முக்கியம் என்பதால், அதற்கான கல்வியே சமூகத்தில் உள்ள அனைவருக்கும் சமவாய்ப்பு கொடுப்பதாக எதிர்பார்க்கப்படுகின்றது.

கல்வி அனைவருக்கும் புதிய அறிவைப் பெறவும் புதிய திறன்களை வளர்த்துக் கொள்ளவும் வாய்ப்பளிக்கிறது. ஒவ்வொருவரும் வாழ்க்கையில் மேம்படச் சிறுவயதிலிருந்தே கல்வி வழங்கப்பட வேண்டும். என்பதோடு, அது அனைவருக்கும் சம வாய்ப்பாக அமைய வேண்டும். வறுமைக்கு எதிரான ஒரு சக்திவாய்ந்த ஆயுதமாகக் கல்வியே விளங்க வேண்டும்.

சமூகத்தில் இன்று ஒரு படித்த நபர் சுற்றுச்சூழலைச் சிறப்பாக விளங்க முடியும். ஆனால், பாடசாலையில் அவர்கள் பெற்ற கல்வியின் காரணமாக அவர்களின் உரிமைகளைச் சுதந்திரமாக அனுபவிக்க முடியும். முறையாக கல்வி பெறாத ஒருவரைக் காட்டிலும் படித்த நன்கு உலகம் அறிந்த நபரைக் கையாளுவது மிகவும் கடினமாகும்.

புதிய கல்வி அறிவை பெறுவது எந்தவொரு தகவலையும் விமர்சன ரீதியாக அணுகுவதற்கு மக்களுக்கு உதவுவதோடு, இவ்வாறானவர்கள் சமூகத்தில் இருக்கும்போது சமூக மாற்றம் என்பது மிகவும் நன்மையானதாகவும் எதிர்கால சந்ததியினருக்குப் பயன் உடையதாகவும் இருக்கும் என்பது நிதர்சனமான உண்மையாகும்.

சமூகத்தில் சாதித்து வற்றப் பெற்றவர்கள் தங்கள் சமூகத்திற்குப் பல நன்மையான மாற்றங்களை ஏற்படுத்தத்தான் பெற்ற கல்வியை அடிப்படையாகக் கொண்டு செயற்பாடுகளை மேற்கொள்வார்கள். இதன் மூலம் ஒரு சமூகம் கல்வியில் முறையாக முதலீடு செய்யும் போது அது புதிய திறமையானவர்களை உருவாக்குவதோடு, சமூகத்தில் எதிர்கால சந்ததியினருக்கு நற் சமூகத்தினை வழங்குவதில் எதிர்கால உலகிற்கு நன்மையானதாகவே அமைகின்றது.

**ஏழைப் பின்னணியில் உள்ள சமூகத்தின் முன்னேற்றத்திற்கும் வெற்றிக்கும் கல்வி முக்கியம் என்பதால், அதற்கான கல்வியே சமூகத்தில் உள்ள அனைவருக்கும் சமவாய்ப்பு கொடுப்பதாக எதிர்பார்க்கப்படுகின்றது**

திறமைகளை வளர்த்துக் கொள்ளக் கல்வியானது அனைவருக்கும் உந்துதலாக அமையவேண்டும் என்பதோடு, கல்வியே அதில் அதிகம் தாக்கம் செலுத்த வேண்டும். இது எதிர்காலத்திற்கு ஒருவகையான முதலீடு என்றும் சமூகத்தில் உள்ள அனைவருக்கும் தனது வாழ்க்கையை மேம்படுத்தும் திறனாகவும் அமையவேண்டும் என்பதில் கல்வி திறவுகோலாக இருக்கவேண்டும்.

மேலும், கல்வியானது சமூகத்தின் வளர்ச்சிக்கு பல மடங்கு பங்களிப்பைச் செய்யவேண்டும் என்பதே சமூகத்தின் எதிர்பார்ப்பாகும்.

மனிதகுலத்தின் வளர்ச்சி மற்றும் முன்னேற்றம் மனித சமூகத்தை முன்னோக்கிக்கொண்டு செல்வதில் படித்தவர்களின் பங்கே அதிகம் என்று கூறலாம். எனவே தான், கல்வியைச் சிறந்த முறையில் பெற்றுக் கொள்வது ஒரு தனி நபருக்கு எவ்வளவு முக்கியமோ அதேபோல் சமூகத்திற்கும் முக்கியமாகும்.

ஒவ்வொரு நபருக்கும் உலகை மாற்றும் சக்தி உள்ளது. துரமான கல்வி கடின உழைப்பு, புதுமை மற்றும் படைப்பாற்றல் ஆகியவற்றுடன் இன்றைய கல்வியானது வழங்கப்படும் போது சமூகம் எதிர்காலத்தில் மட்டுமல்லாது எப்போதும் நல்லவர்களின் கையில் இருக்கும் என்று ஆணித்தரமாகக் கூறலாம்.

அதனால்தான், ‘பெற்ற பிள்ளை கைவிட்டாலும் கற்ற கல்வி கை விடாது’ என்றார் மகாத்மா காந்தி அடிகள்.





பெரியசாமிப்பிள்ளை
செல்வராஜ்
முன்னாள்
ராஜதந்திரி/
தூதுவர்



## நிலையான வளர்ச்சிக்கான
# இளைஞர் டிஜிட்டல் பாதைகள்

சர்வதேச இளைஞர் தினமானது, ஒவ்வொரு வருடமும் ஆகஸ்ட் மாதம் பன்னிரெண்டாம் திகதி கொண்டாடப்படுகின்றது.

“நாட்டுப்பற்று மிக்க நூறு இளைஞர்களை தாருங்கள். இந்தியாவையே உயர்த்திக் காட்டுகிறேன்” என்றார் சுவாமி விவேகானந்தர். இவரது இக்கூற்றானது இளைஞர்களின் வலிமையை கோடிட்டு காட்டுகின்றது.

“வித்தியாசமாகச் சிந்திக்கத் தைரியம், புதிய கண்டுபிடிப்பு, ஆராயப்படாத பாதையில் பயணித்தல், சாத்தியமற்றதைக் கண்டறியும் தைரியம், அதில் உள்ள சிக்கல்களை வென்று வெற்றி பெற வேண்டும்” என்று இளைஞர்களுக்கு அறிவுரை பகிர்ந்தார் பாரதத்தின் முன்னாள் ஜனாதிபதி அப்துல் கலாம்.

இளைஞர்களே ஒரு நாட்டின் தலைவிதியை மாற்றி அமைக்கும் வல்லமை கொண்டவர்கள் ஆவர். ஒரு நாட்டின் சொத்தாகக் கருதப்படும் இன்றைய இளைஞர்கள் தான் நாளைய தலைவர்கள் ஆவர்.

அன்றைய தென்னாபிரிக்க வெள்ளையர்களின் அரசு, இன ஒதுக்கல், நிற வேறுபாட்டு, முறையினைப் பின்பற்றி அந்த நாட்டின் பூர்வீகக் கறுப்பின மக்களை அடிமைகளாக நடத்தியது. அங்கிருந்த இளைஞர்களின் பல்வேறுபட்ட போராட்ட வடிவங்களின் காரணமாக வெள்ளையர்களின் ஆதிக்கத்திலிருந்து தென்னாபிரிக்கா சுதந்திரம் பெற்றது.

2022ஆம் ஆண்டு இலங்கையில் இடம்பெற்ற இளைஞர்களின் போராட்டத்தின் காரணமாக நாட்டின் அரசியல் நிலைப்பாடுகளில் ஒரு மாற்றம் ஏற்பட்டதனையும், அதன் தொடர்ச்சியாக இடம்பெற்ற நிகழ்வுகளினையும் நாம் அனைவரும் அறிந்த விடயங்களாகும் .

இது போல, 1971ஆம் ஆண்டு அன்றைய கிழக்கு பாகிஸ்தானில் ஏற்பட்ட இளைஞர்களது போராட்டமானது, வங்காளதேசம் என்னுமொரு தனிநாடு உருவாகக் காரணமானது. தற்போது பங்களாதேஷில் ஏற்பட்டிருக்கின்ற இளைஞர்களது போராட்டத்தின் காரணமாக முன்னைய அதிபர் நாட்டை விட்டு வெளியேறியதுடன், அதன் தொடர்ச்சியாக அரசியல் மாற்றங்கள் ஏற்பட்டுக் கொண்டிருப்பது மாத்திரமல்லாது, சிறுபான்மையினரின் எதிர்காலமானது ஒரு கேள்விக்குறியான நிலையில், சென்று கொண்டிருப்பதனையும் நோக்க முடிகின்றது. பல்லின மக்களைக் கொண்டுள்ள ஒரு தேசத்தில் அனைத்து இனங்களையும் அரவணைத்துச் செல்ல தவறும் பட்சத்தில் அந்த நாட்டின் ஒற்றுமையானது கேள்விக் குறியாக மாறி விடும்.

இளைஞர்களின் சக்தி பலமிக்க ஒன்றாகும். இதனால், இளைஞர்களின் முக்கியத்துவத்தை உணர்ந்து, 1998 ஆகஸ்ட் மாதம் எட்டாம் திகதி முதல் 12ஆம் திகதி வரை லிஸ்பன் நகரில் நடைபெற்ற உலக நாடுகளின் இளைஞர் விவகாரங்களுக்குப் பொறுப்பான அமைச்சர் குழு சர்வதேச ரீதியில் இளைஞர்களின் பிரச்சினைகளையும், இளைஞர்களின் செயல்பாடுகளையும் கவனத்திற் கொள்ளும் வகையில், இளைஞர்களுக்கான சர்வதேச தினம் ஒன்றை பிரகடனப்படுத்த வேண்டும் என சிபாரிசு செய்தது.

இதன்படி, 1999ஆம் ஆண்டு டிசம்பர் மாதம் 17ஆம் திகதி ஐக்கிய நாடுகள் சபையின் பொதுச் சபையின் A/RES/54/ 120/ ( resolution 54/120) இலக்கப் பிரேரனைப்படி, “சர்வதேச இளைஞர் தினம்” ஆனது ஒவ்வொரு வருடமும் ஆகஸ்ட் மாதம் 12ஆம் திகதி கொண்டாடப்பட வேண்டுமெனத் தீர்மானிக்கப்பட்டது.

டிஜிட்டல் மயமாக்கலினது வளர்ச்சி இன்று உலகத்தை மாற்றியமைத்துக் கொண்டிருக்கின்றது. கையடக்கத் தொலைதொடர்பு சாதனங்கள், சேவைகள் மற்றும் செயற்கை நுண்ணறிவு போன்ற டிஜிட்டல் தொழில்நுட்பங்கள் ஐ.நா. சபையின் நிலையான வளர்ச்சி இலக்குகளை (SDGs) முன்னேற்றுவதற்குக் கருவிகளாக உள்ளன.

இவ்வாண்டு இத்தினத்தின் கருப் பொருளாக அமைவது “நிலையான வளர்ச்சிக்கான இளைஞர் டிஜிட்டல் பாதைகள்” என்பதாகும். இந்த கருப்பொருளானது, டிஜிட்டல் மயமாக்கல் மற்றும் நிலையான வளர்ச்சி இலக்குகளின் (SDGs) முன்னேற்றத்தை விரைவுபடுத்துவதற்கு இடையே உள்ள முக்கிய தொடர்பினை சுட்டிக் காட்டுகின்றது.

ஐக்கிய நாடுகள் சபையின் 2030ஆம் ஆண்டுக்கான நிலையான வளர்ச்சி இலக்குகளில் 17 நிகழ்ச்சி நிரல்கள் உள்ளடக்கப்பட்டுள்ளன.

இந்த இலக்குகளை அடைய அனைத்து தலைமுறையினரதும் ஒத்துழைப்பு அவசியம் என்ற செய்தியை விரிவுபடுத்துவதே இதனது நோக்கமாகும்.

உலக சனத்தொகையில் 1.21 பில்லியன் அல்லது 15.5% மானோர் 15- 24 வயதுக்கு உட்பட்டவராகவும், இலங்கையில் கிட்டத்தட்ட 4.64 மில்லியன் மக்கள் 15- 29 வயதுக்கு உட்பட்டவராகவும் உள்ளனர்.

வறுமை மிக்க நாடுகளில் இளைஞர்களின் எண்ணிக்கை மிக வேகமாக அதிகரித்துச் செல்கின்றது.

13 - 19 வயதிற்கிடையிலான மில்லியன் கணக்கான சிறார்கள் இன்று உலகில் வறுமையில் வாடுகின்றனர்.

கல்வி ரீதியாக 6 - 13 வயதுக்கு இடையிலான அரைவாசி மாணாக்கர் அடிப்படை வாசிப்பு, கணித அறிவு ஆகியவற்றில் பின்னடைவு கொண்டவர்களாக உலகில் காணப்படுகின்றனர்.

உலகளாவிய ரீதியில் சுமார் 75 மில்லியனுக்கும் மேலதிகமான இளைஞர்கள் இன்று வேலைவாய்ப்பற்ற நிலையில், காணப்படுகின்றனர்.

சுமார் 145 மில்லியன் இளவயதுடைய தொழிலாளர்கள் வறுமையில் வாடிக் கொண்டிருக்கின்றனர்.

ஒரு நாட்டின் அரசியல் ஸ்திரமின்மை, உள்நாட்டு யுத்தங்கள், அந்நிய நாடுகளின் ஆக்கிரமிப்புகள், வறுமை, பஞ்சம், காலநிலை மாற்றங்கள், வேலைவாய்ப்பின்மை ஆகியன இன்றைய இளைஞர்களையும், வலது குறைந்த இளைஞர்களையும் மிகப் பெரியதாகத் தாக்கி வருகின்றது. இவற்றின் தாக்கங்களைக் குறிப்பாகக் கிராமப்புறங்களில் காணக் கூடியதாக உள்ளது.

இதனது வெளிப்பாட்டின் ஓர் அம்சமாக இன்று உலகின் பல்வேறு நாடுகளில் நடைபெறுகின்ற

யுத்தங்களில் கூலிப்படையினராக பல நாட்டு இளைஞர்கள் சேர்ந்து போராடுவதனை அவதானிக்கக் கூடியதாக உள்ளது.

இந்த இளைஞர்களைச் சரியான முறையில் நெறிப்படுத்தி, வழிப்படுத்தி இருந்திருந்தால், இவர்கள் சமூகத்திற்குப் பொருத்தமான, எதிர்காலத்தை நிலை நிறுத்தக்கூடிய சக்தி வாய்ந்தவர்களாக விளங்கி இருந்திருப்பார்கள் எனலாம்.

அதிகரித்து வரும் வேலை வாய்ப்பின்மையும் இன்று ஒரு பூதாகரமான பிரச்சினையாக உருவெடுத்துள்ளது.

அடுத்த பதினைந்து வருடக் காலப் பகுதியில் உலகில் சுமார் 600 மில்லியன் புதிய தொழில்களை உருவாக்கப்பட வேண்டுமென ஐக்கிய நாடுகள் சபை கணிப்பிட்டுள்ளது.

2021ஆம் ஆண்டுக்கும் 2030ஆம் ஆண்டுக்கும் இடைப்பட்ட காலப்பகுதியில் சுமார் 78 மில்லியன்களாக இளைஞர் சனத்தொகை அதிகரிக்குமென எதிர்வு கூறப்படுகின்றது. இதில் அரைவாசிக்கும் மேற்பட்ட அதிகரிப்பானது வருமானம் குறைந்த நாடுகளில் காணப்படுமெனக் கருதப்படுகிறது.

கல்வியும் அதனுடன் இணைந்த பயிற்சி முறைகளும் இருந்தால் இந்த சவாலை முறியடித்து முன்னேற முடியுமென எண்ணப்படுகின்றது.

அதிகரித்துச் செல்லும் இளைஞர் பட்டாளத்துக்குத் தேவையான தொழில் வாய்ப்புகளையும், அதற்கான சந்தர்ப்பங்களையும் உருவாக்கிக் கொடுப்பது என்பது இன்று உலக அரசாங்கங்களுக்கிடையே நிலவும் ஒரு மிக முக்கிய சவால் ஆகும்.

குறிப்பாக, பொருளாதார ரீதியில் மிகவும் பின்தங்கிய நிலையில், இருக்கும் கிராமப்புற இளைஞர்கள் மத்தியில் வேலை வாய்ப்பின்மை விகிதம் அதிகரித்தே காணப்படுகின்றது.

நிலம், இயற்கை வளங்கள், நிதி, தொழில்நுட்ப அறிவு, தகவல் அறிவு, கல்வி அறிவு என்பன கிராமப்புற இளைஞர்களுக்குப் பெருமளவு கிடைப்பதில்லை.

இதனால், அவர்களது முன்னேற்றம் பெரிதும் பாதிக்கப்படுகின்றது எனலாம்.

இளைஞர்கள் மத்தியில் விரக்தி நிலைமையை ஏற்படுத்தாது, அவர்களை ஆக்கப்பூர்வமான நடவடிக்கைகளில் ஈடுபடுத்தி, மகிழ்ச்சியான எதிர்காலத்துக்கு வழிகாட்டுவதும்,

நெறிப்படுத்துவதும், அவர்களுக்கான தன்னம்பிக்கையையும், உற்சாகத்தினையும், ஏற்படுத்துவது மட்டுமல்லாது, தீர்மானம் எடுக்கும் முயற்சிகளிலும் அவர்களை உள்ளடக்குவதும் காலத்தின் தேவையாகும்.

கல்வி, வேலைவாய்ப்பு, அரசியல், சமூக, பொருளாதார நிலைமைகளில் அதிக பங்களிப்பினை அரசாங்கம் அவர்களுக்கு வழங்க வேண்டும்.

இவ்வாறு வழங்கும் போது நல்லொழுக்கமுள்ள, பண்பாடான, ஊழலற்ற, கண்ணியமான, எதிர்கால தலைவர்களை உருவாக்க முடியும்.

இன்றைய இளைஞர்களுக்கு எதிர்காலம் நோக்கிய பாரியப் பொறுப்பு ஒன்று கையளிக்கப்பட்டு இருக்கின்றது.

அந்த பொறுப்பை நிறைவேற்ற வேண்டுமாயின், தூரநோக்கு சிந்தனை, பொறுப்புணர்வு, விடாமுயற்சி, பொறுமை, தூய்மை, புதிய கண்டுபிடிப்புகளை மேற்கொள்ளுதல், திறமைகளை வளர்த்துக் கொள்ளுதல், ஆக்கப்பூர்வமான நடவடிக்கைகளில் ஈடுபடுதல் என்பவற்றின் மூலமாகத் தான் அவர்களால் ஒரு வளமான எதிர்காலத்தை, தேசத்தைக் கட்டியெழுப்ப முடியும்.

இளைஞர்களது அர்த்தமான பங்களிப்பு இல்லாவிட்டால், நாம் எடுக்கும் எந்த முயற்சியும் வெற்றியளிக்க மாட்டாது.

சில இளைஞர்கள் இன்று மதுபானத்திற்கும், போதைவஸ்திற்கும், புகையிலை பயன்பாடு, மற்றும் வேறு சில தீய பழக்கங்களுக்கும் அடிமையாகி உள்ளனர்.

அவர்களை இனங்கண்டு, அந்த நிலையிலிருந்து மீட்டெடுத்து, அவர்களை நல்ல வழிக்குக் கொண்டு செல்வது அரசாங்கங்களினதும், அரசு சார்பற்ற நிறுவனங்களினதும், மூத்தோர்களினதும் கரங்களில் தான் தங்கி உள்ளது.

இளைஞர்கள் வல்லவர்களாக, திறமை மிக்கவர்களாக, இருந்தால் மாத்திரமே, ஒவ்வொரு நாடும், உலகமும், முன்னேற்றப் பாதையை நோக்கிச் செல்லும்.

இளைஞர்களுக்கான தலைமைத்துவ அபிவிருத்தி, பிரச்சினைகளைத் தீர்க்கின்ற வழி வகைகள், தொழிற்பயிற்சி, டிஜிட்டல் கல்வியறிவு, தொழில்முனைவு கல்வி, சமூக நடவடிக்கைகளில் ஈடுபாடு, பல்லின சமூகங்கள் மத்தியிலான கலாசாரங்களின் விழுமியங்களை அறிதல், சுகாதார, ஆரோக்கிய மேம்பாடு ஆகியனவற்றில் இளைஞர்களது திறன்கள் விருத்தி செய்யப்படல் வேண்டும்.

போட்டி மிக்க இந்த உலகத்தில், அவைகளைச் சமாளித்து முன்னேறுவதற்கு, இளைஞர்கள் தமக்குள் மறைந்திருக்கும் திறன்களை வளர்த்து, அத்திறமைகளை வெளிக்கொணர்ந்து, சமூகத்தில் ஆளுமை மிக்க மாற்றங்களை ஏற்படுத்த முடியும். இதனை உணர்ந்து, அதற்கேற்ப இளைஞர்கள் விடாமுயற்சியுடனும், ஆர்வத்துடனும் தங்களது கற்கைநெறிகளை தொடர வேண்டும்.

சமூகத் திறன்கள், தொடர்பாடல் திறன்கள், பிரச்சினையைத் தீர்ப்பதற்கான திறன்கள், எழுத்தறிவு சம்பந்தமான திறன்கள், ஊடக அறிவு சார்ந்த திறன்கள், எதனையும் தர்க்க ரீதியாகச் சிந்திக்கக் கூடிய ஆற்றல்கள், படைப்பாற்றல் திறன்கள், போன்றனவே இன்றைய 21ஆம் நூற்றாண்டில் இளைஞர்களுக்குத் தேவைப்படும் திறன்கள் ஆகும். இவைகளை இளைஞர்கள் வளர்த்துக் கொள்வது இன்றைய காலத்தில் தேவைப்பாடாகும்.

நற்பண்புகளை வளர்த்து, நம்பிக்கையுடன் தனது வாழ்வைத் தொடங்கும் பட்சத்தில் குடும்பமும், சமூகமும், நாடும் முன்னேறும் என்பதில் எள்ளளவும் ஐயமில்லை.

நாட்டுப்பற்று மிக்க இளைஞர்களால் தான் ஒரு தேசத்தையே கட்டியெழுப்ப முடியும் என்ற நம்பிக்கை ஒவ்வொருவருக்கும் இருக்க வேண்டும்.

பிரிட்டனில் செய்யாத குற்றத்துக்காக 17 ஆண்டுகள் சிறை

# நஷ்ட ஈட்டில் ‘கோடி’ கழிந்தது

பிரிட்டனைச் சேர்ந்த ஆண்ட்ரூ மலிக்சன் என்பவர் பாலியல் வல்லுறவு செய்ததாக குற்றம் சாட்டப்பட்டு கடந்த 2003ஆம் ஆண்டில், சிறையில் அடைக்கப்பட்டார்.

17 ஆண்டுகள் சிறைத் தண்டனை அனுபவித்த பிறகு, அவர் நிரபராதி என்பது நிரூபணமானது. இதையடுத்து, தனக்கு நஷ்ட ஈடு வழங்கக் கோரி வழக்குத் தொடுத்தார். இரண்டாண்டுகள்




சட்ட போராட்டத்துக்குப் பிறகு அவருக்கு நஷ்ட ஈடு வழங்க பிரிட்டிஷ் அரசு ஒப்புதல் அளித்தது.

நஷ்டஈடு தொகையிலிருந்து சிறையில் வழங்கிய உண்டு-உறைவிடத்துக்கான செலவு கழிக்கப்படும் என்று பிரிட்டிஷ் அரசு தற்போது உத்தரவிட்டுள்ளது. இதன்படி, கழித்த 17 ஆண்டுகளில் அவருக்கு அளிக்கப்பட்ட உணவு, அவர் உறங்க வழங்கப்பட்ட படுக்கை ஆகியவற்றுக்கு ஒரு இலட்சம் பவுண்டுகள் கழிக்கப்படும் என்ற அறிவிப்பு வெளியானதால் ஆண்ட்ரூ மலிக்சன் பெருத்த ஏமாற்றமும் அதிர்ச்சியும் அடைந்துள்ளார்.

## சீனாவில் கர்ப்பமாகும் கார்கள்

சீனாவில் வெயிலில் நிறுத்தப்படும் கார்கள் திடீரென வீங்கி விடுவதாககவும் காரணம் சூரியன்தான் என்றும் சமூக ஊடகங்களில் புகைப்படங்கள் பரவியிருக்கின்றன. எல்லா கார்களுக்கும் அல்ல, சீன தயாரிப்பு கார்களுக்கே இந்த நிலை ஏற்படுவதாகவும் சில உள்ளூர் மக்கள் பதிவிட்டுள்ளனர்.

சீனாவில் தற்போது கடுமையான வெப்பம் வாட்டி வதைத்து வரும் நிலையில், வீதியில் நிறுத்தப்படும் கார்கள் திடீரென இப்படி வீங்கி விடுகின்றனவாம். இந்த புகைப்படங்களைத்தான் பலரும் சமூக வலைத்தளத்தில்




பகிர்ந்து, கார்கள் கர்ப்பமாகி விட்டதாகக் குறிப்பிட்டுள்ளனர்.

இது நகைச்சுவையாக இருந்தாலும், உண்மையில் என்ன நடக்கிறது என்றால், உள்ளூரில் தயாரிக்கப்படும் கார்களில் அடிக்கப்படும் பெயிண்டுகள்தான் வெயிலில் இப்படி உப்பி விடுவதாகக் அந்நாட்டு மக்கள் கூறுகின்றனர்.

கராச்சி

## 74 சதவீதத்தினர் வழியின்றி தவிப்பு



பாகிஸ்தானின் மக்கள் தொகை ஏறக்குறைய 24 கோடியாகவுள்ளது. அவர்களில் பலர் செலவுக்கு வழியின்றி தவித்து வரும் சூழல் காணப்படுகிறது. இதுபற்றி வெளியான ஆய்வு அறிக்கை ஒன்றில், 56 சதவீத மக்கள் அத்தியாவசிய தேவைகளுக்கு செலவிட்ட பின்னர் சேமிப்பதற்கு முடியாத சூழலில் உள்ளனர் என ஆய்வு ஒன்று தெரிவிக்கின்றது.

அகதிகள் பாடசாலை மீது தாக்குதல்

## 100க்கும் மேற்பட்டோர் பலி

காசாவில் அகதிகள் தங்கியிருந்த பாடசாலை மீது இஸ்ரேல் நடத்திய வான்வழி தாக்குதலில் 100க்கும் மேற்பட்டோர் பலியாகினர். கிழக்கு காசாவின் தராஜ் மாவட்டத்தில் ஒரு பாடசாலையில் ஏராளமான பாலஸ்தீனர்கள் தங்க வைக்கப்பட்டுள்ளனர். இவர்கள் தொழுகை செய்து கொண்டிருந்தபோது இஸ்ரேல் வான்வழி தாக்குதல் நடத்தியது. இதில் 100 பேர் பலியாகினர்.



50க்கும் மேற்பட்டோர் படுகாயங்களுடன் சிகிச்சை பெற்று வருகின்றனர்.

புதுடெல்லி

## இந்திய எல்லைகளில் குவியும் பங்களாதேஷ் இந்துக்கள்

பங்களாதேஷில் இடஒதுக்கீட்டு நடைமுறையை எதிர்த்து கடந்த ஜூன், ஜூலையில் மாணவர் சங்கங்கள் பல்வேறு போராட்டங்களை நடத்தின. இதில் 560 பேர் உயிரிழந்தனர். நூற்றுக்கணக்கானோர் படுகாயம் அடைந்தனர்.

பாதுகாப்பு அச்சுறுத்தல் காரணமாக பிரதமர் ஷேக் ஹசீனாகடந்த 5ஆம் திகதி பதவியை இராஜினாமா செய்துவிட்டு இந்தியாவில் தஞ்சமடைந்துள்ளார். தற்போது, நோபல் பரிசு பெற்ற முகமது யூனுஸ் பங்களாதேஷின் இடைக்கால தலைவராக பொறுப்பேற்றுள்ளார்.

மாணவர்கள் போராட்டம் ஓய்ந்தாலும் பங்களாதேஷ்



முழுவதும் இந்துக்கள் மீதும் தொடர்ச்சியாக தாக்குதல் நடத்தப்பட்டு வருகிறது. சுமார் 17,000 இந்து குடும்பங்கள் வன்முறையால் கடுமையாக பாதிக்கப்பட்டு உள்ளன. ஒரு இலட்சத்துக்கும் மேற்பட்ட இந்துக்கள் இடம் பெயர்ந்து உள்ளனர். இந்தியாவும் பங்களாதேஷும் 4,096 கி.மீ. எல்லையை பகிர்ந்துள்ளன. இந்தியாவின் மேற்குவங்கம், திரிபுரா, அசாம், மிசோரம், மணிப்பூர் ஆகிய 5 மாநிலங்கள், பங்களாதேஷ் எல்லையில் அமைந்துள்ளன. இந்த 5 மாநிலங்களின் எல்லைப் பகுதிகளில் ஆயிரக்கணக்கான பங்களாதேஷ் இந்துக்கள் குவிந்து வருகின்றனர்.



## நட்வர் சிங் காலமானார்

இந்தியாவின் முன்னாள் வெளியுறவுத்துறை அமைச்சர் நட்வர் சிங் உடல் நலக்குறைவால் சனிக்கிழமை (11) தனது 93ஆவது வயதில் காலமானார்.


இவர் 2004-2005ஆம் ஆண்டு பிரதமர் மன்மோகன் சிங் தலைமையிலான மத்திய அரசின் வெளியுறவுத்துறை அமைச்சராக இப்பதவி வகித்தார். இவர் காங்கிரஸ் கட்சியின் முன்னாள் எம்.பியுமாவார்.

1966 முதல் 1971 வரையிலான கால கட்டத்தில் நட்வர் சிங் பாகிஸ்தான்கான இந்திய தூதராக பணியாற்றி வந்தார். இவருக்கு மத்திய அரசு 1984ஆம் ஆண்டு விருது வழங்கி பாராட்டியமை குறிப்பிடத்தக்கது.

## மறுத்தார் மாதபி புச்

அதானி நிறுவனம் வெளிநாடுகளில் உருவாக்கிய போலி நிறுவனங்களில் செபி அமைப்பின் தலைவர் மாதபி புச் பங்குகளை வைத்துள்ளதாக ஹிண்டன்பர்க் நிறுவனம் குற்றம் சாட்டிய நிலையில், இந்த குற்றச்சாட்டில் எந்த உண்மையும் இல்லை என்று மாதபி புச் தெரிவித்துள்ளார்.

அமெரிக்காவைச் சேர்ந்த ஹிண்டன்பர்க் நிறுவனம் கடந்த ஆண்டு ஜனவரி மாதம் அதானி குழுமம் குறித்து அறிக்கை ஒன்றை வெளியிட்டது. அதில், அதானி குழுமம் பங்கு மோசடி உட்பட பல்வேறு முறைகேடுகளில் ஈடுபட்டு வருவதாக ஹிண்டன்பர்க் குற்றம்சாட்டியது. இதைத் தொடர்ந்து அதானி குழுமத்தின் பங்கு மதிப்பு கடும் வீழ்ச்சியைச் சந்தித்தது. அதானி




குழுமத்துக்கு ரூ.11 லட்சம் கோடி இழப்பு ஏற்பட்டது. அதானி நிறுவனங்களில் முதலீடு செய்திருந்த முதலீட்டாளர்கள் கடும் பாதிப்பை எதிர்கொண்டனர்.

பரிஸ் 2024: பெண்களுக்கான மரதனில்

# தங்கம் வென்றார் சிஃபான் ஹஸன்



பிரான்ஸில் நடைபெற்று வந்த பரிஸ் 2024 ஒலிம்பிக்கின் பெண்களுக்கான மரதனோட்டப் போட்டியில் நெதர்லாந்தின் சிஃபான் ஹஸன் தங்கப் பதக்கம் வென்றார்.

ஞாயிற்றுக்கிழமை (11) நடைபெற்ற இப்போட்டியில் எதியோப்பியாவின் டிக்ஸ்ட் அசீஃபா வெள்ளிப் பதக்கத்தையும், கென்யாவின் ஹெலன் ஒபிரி வெண்கலப் பதக்கத்தையும் பெற்றார்.

பதக்கப் பட்டியலில் 39 தங்கம், 27 வெள்ளி, 24 வெண்கலப் பதக்கங்களுடன் முதலாமிடத்தில் சீனா காணப்படுகின்றது. 38 தங்கம், 42 வெள்ளி, 43 வெண்கலத்துடன் இரண்டாமிடத்தில் ஐக்கிய அமெரிக்காவும், 18 தங்கம், 18 வெள்ளி, 14 வெண்கலப் பதக்கங்களுடன் மூன்றாமிடத்தில் அவுஸ்திரேலியாவும், 18 தங்கம், 12 வெள்ளி, 13 வெண்கலப் பதக்கங்களுடன் நான்காமிடத்தில் ஜப்பானும் காணப்படுகின்றது. 16 தங்கம், 24 வெள்ளி, 22 வெண்கலப் பதக்கங்களுடன் ஐந்தாமிடத்தில் பிரான்ஸ் காணப்படுகின்றது.



அர்ஜுன் பெரேரா ஞாபகார்த்த கிண்ண டென்னிஸ் போட்டியில்

## புனித செபஸ்தியான் கல்லூரி பிரகாசிப்பு

அஸ்ஹர் இப்றாஹிம்

இலங்கை டென்னிஸ் சம்மேளனம் ஒழுங்கு செய்திருந்த அர்ஜுன் பெரேரா ஞாபகார்த்த கிண்ணத்துக்கான தேசிய மட்ட டென்னிஸ் போட்டியில் 18 வயதுக்குட்பட்ட பிரிவு ஒன்று போட்டியில் மொரட்டுவ புனித செபஸ்தியான் கல்லூரி சகலதுறை சம்பியன்களாகத் தெரிவு செய்யப்பட்டுள்ளது.

தனி நபர்களுக்கான போட்டியில் இக் கல்லூரி மாணவரான கெவின் பெர்ணான்டோ, அமீச திஸாநாயக ஆகியோர் சிறப்பாட்டக்காரர்களாக தெரிவு செய்யப்பட்டனர்.



சிநேகபூர்வ போட்டியில்

## லெஜண்ட்ஸை வென்ற நியூ ஸ்டார்ஸ்

எம்.யூ.எம்.சனூன்

புத்தளம் மாவட்ட விளையாட்டு அரங்கில் புதன்கிழமை (07) நடைபெற்ற புத்தளம் நகரின் 40 வயதுக்கு மேற்பட்ட கால்பந்தாட்டக் கழகமான லெஜன்ட்ஸ் அணிக்கெதிரான சிநேகபூர்வ கால்பந்தாட்டப் போட்டியில் தற்போதைய நியூ ஸ்டார்ஸ் 2-0 என்ற கோல் கணக்கில் வென்றது.

டயலொக் பாடசாலைகள் றக்பி தொடர்:

## றோயலை வென்ற இசிப்பத்தன

டயலொக் பாடசாலைகள் றக்பி தொடரில், ஹவ்லொக் பார்க்கில் சனிக்கிழமை (10) நடைபெற்ற றோயல் கல்லூரியுடனான போட்டியில் 19-18 என்ற புள்ளிகள் கணக்கில் இசிப்பத்தன கல்லூரி வென்றது.

இதேவேளை, பம்பலப்பிட்டியில் நடைபெற்ற கண்டி திருத்துவக் கல்லூரியுடனான போட்டியில் 37-28 என்ற புள்ளிகள் கணக்கில் சென். பீற்றர்ஸ் கல்லூரி வென்றிருந்தது.

Dialog
SCHOOLS
RUGBY
நாளைய செம்பியன்களை வலுவூட்டும்
Dialog
எதிர்காலம் இன்றே.

கொமியுனிட்டி ஷீல்ட்: பெனால்டியில்


## யுனைட்டெட்டை வென்று சம்பியனானது சிற்றி

இங்கிலாந்து கால்பந்தாட்டச் சங்க கொமியுனிட்டி ஷீல்ட் போட்டியில் மன்செஸ்டர் சிற்றி சம்பியனானது.

வெம்ப்ளியில் சனிக்கிழமை (12) நடைபெற்ற இங்கிலாந்து கால்பந்தாட்டச் சங்க சவால் கிண்ண சம்பியனான மன்செஸ்டர் யுனைட்டெட்டுக்கெதிரான இப்போட்டியில் பெனால்டியில் 7-6 என்ற ரீதியில் இங்கிலாந்து பிறீமியர் லீக் சம்பியன்களான மன்செஸ்டர் சிற்றி வென்று சம்பியனானது.

போட்டியின் வழமையான நேர முடிவில் இரண்டு அணிகளும் தலா ஒவ்வொரு கோலைப் பெற்றிருந்தது. சிற்றி சார்பாகப் பெறப்பட்ட கோலை பேர்ணார்டோ சில்வாவும், யுனைட்டெட் சார்பாகப் பெறப்பட்ட கோலை அலெஜான்ட்ரோ கர்னாச்சோவும் பெற்றனர்.

பெனால்டியில் சில்வாவின் உதையை



யுனைட்டெட்டின் கோல் காப்பாளர் அன்ட்ரே ஒனானா தடுத்தபோதும், ஜடோன் சஞ்சோவின் உதையை சிற்றியின் கோல் காப்பாளர் எடெர்சன் தடுத்ததுடன், யுனைட்டெட்டின் ஜொனி இவான்ஸ் தனதுதையை கோல் கம்பத்துக்கு மேலால் செலுத்தியிருந்தார்.

விஜய நியூஸ்பேப்பர்ஸ் லிமிட்டெட்டினால் திங்கட்கிழமை 12,ஆகஸ்ட் 2024, இல. 08, ஹுணுபிட்டிய குறுக்கு வீதி, கொழும்பு - 02 இல் வடிவமைக்கப்பட்டு, இந்த மின்னிதழ் வெளியிடப்பட்டது.